₹10

fmpb

# அறைகூவல்

Volume 53 | Issue 7 | July 2023






# கோலியாத்தை எதிர்கொள்!!

பரிசுத்த வேதாகமத்தில் 'பாடுகள்' என்பது கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்படும் நல்லதொரு பாடமாகவும், பயிற்சியாகவும் இருக்கிறது. அவைகளிலிருந்து மட்டுமே நாம் அநேக பாடத்திட்டங்களை அறிந்து கொள்கிறோம். அதுமட்டு மல்லாமல், நமது நடத்தையையும் குணாதிசயங்களையும் அவை மாற்ற வல்லமையுள்ளது. நாம் நம்முடைய வாழ்வில் கிறிஸ்துவுக்காக அநுபவிக்கும் பாடுகள், நம்மை உருவாக்கி, பண்படுத்தி அதன்மூலம் கிறிஸ்துவின் அன்பை நாம் வெளிக்காட்ட நமக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

**பாடுகள் 3 வகைகள் :-**

**1.பொதுவான பாடுகள்:** உலக மக்கள் அனைவரும் இவ்வித பாடுகளுக்குள் போகும்போது, அது அனைவரையுமே பாதிக்கும். (எ.கா) கொரோனா, விபத்து, நோய் இவைகள் வரும்போது, அது கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள், இந்துக்கள் என்று மதம் பார்த்தோ அல்லது இனம் பார்த்தோ வருவதில்லை. இப்பாடுகள் உலகிலுள்ள அனைவருக்கும் பொதுவான பாடுகளாகும். இப்பாடுகளுக்கு இயற்கையே காரணம். **2. பாவத்தினாலான பாடுகள்:** நாம் ஒரு தவறோ குற்றமோ செய்து, அந்த குற்றத்தில் அகப்பட்டு பாடுகளுக்குள்ளாகும்போது, அது பாவத்தினால் வரும் பாடுகளாகும். இப்பாடுகளுக்கு நாமே காரணம். **3. ஆவிக்குரிய பாடுகள்:** இத்தகைய பாடுகள் கிறிஸ்தவர்களுக்கு மட்டும் மிக அவசியமான ஒன்றாக நான் கருதுகிறேன். கிறிஸ்தவர்களாகிய நாம் வாழ்வது இந்த உலகத்தில்தான். ஆனால், நாம் இவ்வுலகத்திற்குரியவர்களல்ல. ஆகவே, இந்த உலகம் நம்மைப் பகைக்கிறது.

உலகம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவையே பகைத்து, பாடுகளுக்கு உட்படுத்தியதென்றால், நாம் அனைவரும் எம்மாத்திரம்! இதையே யோவான் 15:18,19-ன் மூலம் நாம் அறிகிறோம். இந்த உலகில் நாம் அநுபவிக்கும் பாடுகளில் வேற்றுமைகள் இருக்கலாம், சூழ்நிலைகளில் மாற்றங்கள் இருக்கலாம், பாடுபடுத்துகிறவர்களிலும் பலதரப்பட்டவர்கள் இருக்கலாம். ஆனால், பாடுகள் அனைவருக்கும் கண்டிப்பாக உண்டென்பதே பரிசுத்த வேதாகமம் நமக்கு விளக்கும் தெளிவான செய்தியாகும். ஆண்டவராகிய தேவன் நம்மைப் பாடுபடுத்துகிறவரல்ல. ஆனால், நம்மைப் பாடுகளுக்குட்படுத்திப் பார்க்க சாத்தானை அனுமதிக்கிறார். அதைத்தான் நாம் யோபுவின் புத்தகத்தில் தெளிவாகக் காண்கிறோம்.

ஆகவே, கிறிஸ்துவினிமித்தம் நாம் அநுபவிக்கும் பாடுகள் அனைத்தும் நம்மைப் பரவசமாக ஓடிமுடிக்கவைக்கும் பந்தயமாக எண்ணி, நமது விசுவாச வாழ்வில் முன்னேறுவோம். நாம் அநேக நேரங்களில் ஆசீர்வாதத்தை, ஐசுவரியத்தை, இன்பத்தை ஆண்டவர் தரும்போது, ஏன் ஆண்டவரே? என்று கேட்பதில்லை. ஆனால் பாடுகள், துன்பங்கள், வறுமை வழியாக நாம் கடந்துபோக அனுமதிக்கப்படும்போது மட்டும்தான் ஏனென்று கேட்க துணிகிறோம். அது நமது வேதத்திற்கு முற்றிலும் முரணானது. இதைத்தான் இம்மாத தலைப்பான 'பாடநுபவிக்க தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்' என்பதைக் கொண்டு, பல கோணங்களில் தியானிக்க இருக்கிறோம்.

கோலியாத்துக்கள் போன்ற பாடுகள் நமக்கு எதிரே வரும்போது அதை மேற்கொள்ள தேவன்தாமே நமக்கு பெலன் தருவார். ஏனென்றால் அவர் நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில் அக்கினிமயமான பாடுகள் மத்தியிலும் நம்மோடிருப்பவர் என்பதை தானியேல் புத்தகத்தில் தெளிவாக வாசிக்கிறோம்.நாம் தேவனுக்காக வாழும்போது எத்தகைய பாடுகளையும், இழப்புகளையும், மரணத்தையும்கூட சந்திக்க நேரிடலாம். ஆயினும், துணிவுடன் செல்லும் செயல்வீரர்களாய் நாம் செயல்பட நம்மைநாமே ஒப்புக்கொடுப்போம். இவ்வுலகில் வரும் பொதுவான பாடுகளானாலும், பாவத்தினால் வரும் பாடுகளானாலும், ஆவிக்குரிய வாழ்வில் வரும் பாடுகளானாலும் நமக்கு உதவி செய்ய ஒரு கர்த்தர் உண்டு என்பதை நாம் மறந்துபோக வேண்டாம். அவரே நம் ஒவ்வொருவருக்கும் போதுமானவராய் இருப்பாராக! ஆமென்.

***"பாடுகள் என்றும் பரவசமே! அது ஓடியே முடிக்கும் பந்தயமே!"***

**- மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

**கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக.**

*– 1 பேதுரு 5:10*

**நாம் அநுபவிக்கும் சாதாரண பாடுகள் முக்கியமானவையல்ல. கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளோடு இணைந்த பாடுகளே நமக்கோர் சிறந்த மிக அழகிய அன்பின் ஈவாகும்.**

*– அன்னை தெரேசா*

**இப்படியிருக்க, கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியால், நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி மாம்சத்தில் இருக்கும் காலம்வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாகப் பாவங்களை விட்டோய்ந்திருப்பான்.**

*– 1 பேதுரு 4: 1,2*

**நல்ல குணாதிசயத்தைக் கஷ்டப்படாமல் எளிதில் உருவாக்கிட முடியாது. சோதனை மற்றும் பாடுகளை அநுபவிப்பதின் மூலமே நமது ஆத்துமா பெலப்பட்டு, சிந்தை தெளிவுற்று, வாழ்வின் நோக்கம் தூண்டப்பட்டு, நாம் அதில் வெற்றி பெற முடியும்.** *– ஹெலன் கெல்லர்*


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |

*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*


**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

**நமது தரிசனம்:**

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

# பொதுச்செயலாளரிடமிருந்து...

இயேசுகிறிஸ்துவை ஒருமுறைகூட அறியாத இந்தியரனைவரும் அவரை அறிந்திடச் செய்யும் உன்னதப்பணியில் எங்கள் உடன் பங்காளிகளுக்கு, உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் எனது அன்பின் நல்வாழ்த்துக்கள்!

கெட்ட குமாரன் உவமையில் தகப்பனின் அன்பும் கருணையும், இளைய மகனின் மனந்திரும்புதலும், மூத்த மகன் அந்த மனந்திரும்புதலின் மகிழ்ச்சியிலிருந்து தன்னை விலக்கிக்கொள்வதும் உள்ளடங்கியுள்ளது. சொத்து முழுவதையும் அபகரித்த இளைய மகனுக்காக தகப்பன் இதுவரை செய்ததையும், இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதையும் ஒப்பிட்டுப்பார்த்ததால், மூத்த மகன் தன்னை அந்த மனந்திரும்புதலின் மகிழ்ச்சி கொண்டாட்டத்திலிருந்து ஒதுக்கிக்கொண்டான். 'அதற்குத் தகப்பன்: "மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது" என லூக்கா 15:31-ல் கூறுவதைப் பார்க்கிறோம். இதில் "நீ என்னோடிருக்கிறாய்" என்பது மூத்த மகனின் அந்தஸ்து அல்லது ஸ்தானத்தைக் குறிக்கிறது. "எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது" என்பது மூத்த மகனின் சொத்துடைமையாகும். இவ்வாறாகவே, விசுவாசிகளாகிய நாமும் தேவனுக்குள் கிறிஸ்துவில் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறோம். ஆகவே, தேவனுக்குச் சொந்தமான அனைத்தையும் கிறிஸ்துவின் மூலம் நாம் ஒருங்கே பெற்றிருக்கிறோம் என்பதைப் புரிந்துகொண்டு, அழியும் ஆத்துமாக்களை மீட்கும் பணியில் உற்சாகமாக ஈடுபட வேண்டும்.

**தமிழ்நாடு மாநில முகாம்:** கடந்த மே மாதம் 18 முதல் 21-ம் தேதிகள் வரை நமது தமிழ்நாடு மாநில முகாம் சேலத்திலுள்ள டேனிஷ்பேட்டையில் வைத்து மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் மொத்தம் 3140 பேர் பதிவு செய்து கலந்து கொண்டனர். தேவ ஆவியானவர் அவர்கள் மத்தியில் மிகவும் வல்லமையாகச் செயல்பட்டார். உபவாச நாளன்று ஜெப ஆவியானவர் நமது தேசத்தின் மீட்பிற்காக ஜெபித்த அம்மக்கள்மீது வந்திறங்கினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**அமிர்தசரஸ் பேராயத்தின் அருட்பொழிவு ஆராதனை:** பஞ்சாபிலுள்ள அமிர்தசரஸ் பேராலயத்தில் வைத்து கடந்த 2023 மே 28-ம் தேதி நமது மிஷனரிகள் 24 பேரை அமிர்தசரஸ் பேராயத்தின் பிஷப் மாமறைதிரு. அறிவர். பிரதீப் குமார் சாமந்தராய் அவர்கள் டீக்கன்களாக அருட்பொழிவு செய்தார்கள். இந்நிகழ்வு நமக்கு மிகவும் உற்சாகமூட்டி நமது ஊழியத்திற்கு கூடுதல் வலு சேர்ப்பதாக இருப்பதால், மரியாதைக்கும் பாசத்திற்குமுரிய பேராயர் அவர்களுக்கு நாம் இயக்கமாக நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளோம்.

**அஸோம் விஜயம்:** ஜுன் முதல் வாரத்தில் பணித்தள மற்றும் மண்டலச் செயலர்களும், நானும் அஸோமிலுள்ள மிஷனரிகளையும் பணித்தளங்களையும் பார்வையிட்டோம். அங்கு மிஸ்ஸிங் இன மக்கள் மத்தியிலே நமது ஊழியம் வளர்ந்து வருகிறது. அத்துடன் அந்த மக்கள் வாழும் கிராமங்களிலுள்ள நமது ஆராதனைக்குழுக்களைச் சந்தித்து அவர்களோடும், அங்குள்ள மிஷனரிகளோடும் ஆவிக்குரிய கூட்டங்களை நடத்தியது, எங்களுக்கு மிகவும் உற்சாகமளிப்பதாக அமைந்தது.

**தேவ பாதுகாப்பு:** கடந்த நாட்களில் ஒடிசாவில் வைத்து கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரெயில் வண்டி மிகப்பெரிய விபத்தைச் சந்தித்தபோது, அந்த ரெயிலில் நமது 2 மிஷனரிகளும், ஒரு பிள்ளையும் பயணித்தார்கள். 288 பேர் அவ்விபத்தில் உயிரிழக்க நேரிட்டாலும், தேவன் தமது நித்திய கிருபையினாலே நமது மிஷனரிகளையும், அப்பிள்ளையையும்

எக்காயமுமின்றி பாதுகாத்தார். இவ்விபத்தில் தங்களுக்குப் பிரியமானவர்களையும், தங்கள் குடும்ப வாழ்வாதார ஈட்டாளர்களையும் இழந்து தவிப்போருக்காக ஜெபிப்போம்.



**பீஹார் விஜயம்:** பீஹாரிலுள்ள நமது மிஷனரிகளை கடந்த ஜூன் 5, 6-ம் தேதிகளில் சந்தித்தோம். 5-ம் தேதி முஸ்கான் கிராமத்தில் விசுவாசிகளால் கட்டப்பட்ட திருச்சபையை தேவநாம மகிமைக்காகப் பிரதிஷ்டை செய்தோம். அவ்விசுவாசிகளின் ஒட்டுமொத்த வாழ்வில் அவர்கள் அடைந்துள்ள வளர்ச்சி மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. தங்களது கிராமத்தில் எவரும் குடிப்பழக்கத்திற்கு ஆளாகிவிடக்கூடாது என தீர்மானித்து நமது விசுவாசிகள் தங்களின் சக கிராம வாசிகளைச் சந்தித்து வருகிறார்கள் என்று கேட்ட செய்தி இனிதாக இருந்தது.



**பேராயர்கள் சந்திப்பு:** வடஇந்திய திருச்சபை (CNI) பாட்னா பேராயத்தின் பிஷப் மாமறைதிரு. ஃபிரான்சிஸ் ஹன்ஸ்தக் அவர்களை கடந்த ஜூன் மாதம் 7-ம் தேதி பாகல்பூர் பேராய அலுவலகத்தில் வைத்து சந்தித்து நமது ஊழியக்காரியங்களைப் பகிர்ந்து கொண்டோம். பாட்னா பேராயத்திற்கும், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்திற்கும் உள்ள உறவு 1978-ம் ஆண்டில் ஆரம்பித்து, இதுவரை இன்னும் உறுதியாகக் காணப்படுகிறது. அந்தப் பேராயர் அவர்கள் எங்களை மிகவும் அன்புடன் உபசரித்து, நமது ஊழியத்திற்கு தொடர்ந்து பேராதரவு தருவதாக உறுதியளித்துள்ளார்கள். ஜூன் 8-ம் தேதி வடக்கு இவாஞ்சலிக்கல் லூத்தரன் திருச்சபைகளுடைய முன்னாள், இன்னாள் மாடரேட்டர்களை ஜார்க்கண்டிலுள்ள கெய்ராபானி என்ற இடத்திலுள்ள ஊழியப்பயிற்சி மையத்தில் வைத்து சந்தித்தோம். இச்சந்திப்பு மிகவும் பயனுள்ளதாகவும், நமது ஊழியத்திற்கு திருச்சபையின் ஆதரவைப் பெலப்படுத்துவதாகவும் அமைந்தது.

**இந்திய விக்ளிஃப் நிறுவனத்தாரோடு சந்திப்பு:** நமது தலைமையகத்தில் வைத்து ஜூன் 10-ம் தேதி இந்திய விக்ளிஃப் நிறுவனத்தின் தலைவர் மற்றும் பிரதான இயக்குனரை நமது ஓய்வுப்பெற்ற மூத்த வேதாகம மொழிப்பெயர்ப்பு மிஷனரியாகிய அருட்திரு. S. ராஜேந்திரன் அவர்களோடு சந்தித்தேன். இந்திய விக்ளிஃப் நிறுவனம் நமது வேதாகம மொழிப்பெயர்ப்புப்பணியின் பங்குதாரராக இருக்கிறது. இவ்வுறவைப் பெலப்படுத்தி, வேத வசனம் இன்னும் அநேக மொழிகளில் வெளிவர ஆலோசித்து தீர்மானிக்கப்பட்டது.

## ஜூலை மாதத்தின் முக்கிய நிகழ்வுகளும், கூட்டங்களும்:-

**டிவிஷனல் செயலர்களின் கூடுகை:** வருகிற ஜூலை மாதம் 3,4-ம் தேதிகளில் டிவிஷனல் செயலர்களின் ஜெபக்கூடுகையும், 5,6-ம் தேதிகளில் அவர்களோடு திட்டக்கூடுகையும் நடைபெறவுள்ளது.

**கிதியோனியர் கூடுகை:** கரூரில் வைத்து ஜூலை 7,8-ம் தேதிகளில் நடைபெறவுள்ள கிதியோன் இன்டர்நேஷனல் ஊழியத்தின் 6-வது தமிழ்நாடு மாநில முகாமில் தேவசெய்தி யளிக்க அழைக்கப்பட்டுள்ளேன். இக்கூடுகையில் என்னை தேவன் பயன்படுத்த ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**குஜராத் - கோதாவரி பிராந்திய விஜயம்:** ஜுலை 2-வது வாரத்தில் குஜராத் மற்றும் மத்திய மண்டலத்திலுள்ள கோதாவரி பிராந்தியப் பணித்தளங்களை விஜயம் செய்யவிருக்கிறேன். இச்சந்திப்பு ஊழியத்திற்கு ஆசீர்வாதமாக அமைய ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**டோனாவூர் கட்டிடப் பிரதிஷ்டை:** டோனாவூரிலுள்ள இரு ஜெபக்குழுத்தலைவர்கள் அன்பளிப்பாக ஈந்த நிலத்தில் ஒரு ஜெப மையம் கட்டப்பட்டுள்ளது. இம்மையம் ஜெபம் நடத்துவதற்கும், டோனாவூரிலுள்ள சந்தோஷ் வித்யாலயாவில் படிக்கும் மிஷனரிப்பிள்ளைகளின் பெற்றோர்கள் வந்து தங்குவதற்கும் பயன்படுத்தப்படும்.

**செயலர்களின் நியமனம்:** நமது இயக்கத்தின் 214-வது செயற்குழு கூட்டம் கீழே கொடுக்கப்பட்டுள்ள மூத்த மிஷனரிகளை மண்டல மற்றும் அதற்கும் மேலான பொறுப்பாளர்களாக நியமித்துள்ளது. இந்த நியமனம் இம்மாதம் 1-ம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. இப்புதிய பொறுப்பேற்றுள்ள சகோதரர்களுக்காகவும், அவர்களுடைய குடும்பங்களுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

| பெயர் | புதிய நிலை |
|---|---|
| **அருட்திரு. டேனியல் தாமஸ்** | செயலர் – தமிழ்நாடு & பாண்டிச்சேரி விரிவாக்கப்பணி |
| **அருட்திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங்** | செயலர் – வடக்கு மண்டலம், தமிழ்நாடு விரிவாக்கப்பணி |
| **அருட்திரு. ஜாண் சுந்தர்சிங்** | செயலர் – மத்திய சென்னை விரிவாக்கப்பணி |
| **அருட்திரு. ரவிகுமார்** | செயலர் – மேற்கு மண்டலம், தமிழ்நாடு விரிவாக்கப்பணி |
| **அருட்திரு. ஐசக் ராஜா** | செயலர் – மேற்கு மண்டலம், பணித்தளம் |
| **அருட்திரு. பொன்னுசாமி** | செயலர் – வடக்கு மண்டலம், பணித்தளம் |

உங்களது ஜெபம் மற்றும் ஆதரவுகளுக்காக நன்றி கூறுகிறோம். நமது மிஷனரிகள் யாவரையும் ஒருநாளைக்கு ஒருமுறையாவது தங்களது ஜெபங்களில் நினைத்துக்கொள்ளுங்கள்.

தேவ ஊழியத்தில் தங்கள் சக ஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு - ராணிப்பேட்டை பணிமாவட்டம்

ராணிப்பேட்டை பணிமாவட்டம், தென்றல் நகர், CSI – ராஜாதி ராஜா ஆலயத்தில் வைத்து கடந்த 28.05.2023 அன்று அருட்திரு. J. ஸ்டான்லி கிறிஸ்டோபர் தலைமையில், வேலூர் பேராய கிழக்கு வட்டார தலைவர் அருட்திரு. S. ரூஃபஸ் அவர்களால் 15 மிஷனரிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். இந்த ஆராதனையைப் பணிமாவட்ட தலைவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.





# பாடுபட தெரிந்துகொள்ளப்பட்டோம்!

'நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்' என்கிற ஆண்டவரின் வார்த்தை நமக்கும் அவருக்கும் உள்ள நெருக்கமான உறவை வெளிப்படுத்துகிறது. ஆண்டவர் நம்மைத் தெரிந்துகொண்டார் என்பதைக் காட்டிலும் சந்தோஷமானது வேறெதுவுமில்லை. தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொருவரையும் அவர் ஒரு பிரத்யேகமான நோக்கத்திற்காகவே தெரிந்தெடுத்துள்ளார் என்பதை நாம் முதலில் மனதில் கொள்ளவேண்டும். பொதுவாக, ஜனங்களுக்கு ஒளியாக, தேசங்களுக்கு ஆசீர்வாதமான ராஜரீக ஆசாரியர்களாக, அடிமைத்தன வாழ்விலிருப்போருக்கு விடுதலைக்கான வழியைக் காண்பிக்கும் ஆசீர்வாத வாய்க்கால்களாக நாம் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தாலும், 'கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும்' (பிலி.1:29) நமக்கு அருளப்பட்டிருக்கிறது என்பதின் மூலம் நாம் கிறிஸ்துவின் நிமித்தமாக இவ்வுலகில் பாடுகளை அனுபவிக்கவும் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. ஆண்டவரின் தெரிந்தெடுப்பில் இது மிக முக்கியமானது.

கிறிஸ்தவ வாழ்வில் சோதனைகளும் வேதனைகளும், பாடுகளும் போராட்டங்களும், அச்சமும் ஆபத்தும், துன்பமும் தொல்லையும், இழப்பும் கண்ணீரும், வியாதியும் வியாகுலமும் கண்டிப்பாய் நேரிடும். அது தவிர்க்க முடியாதது என்பதை நாம் பவுலடியாரின் ஊழியப்பாதை மூலம் அறிந்து கொள்ளலாம். 'உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்' என்று யோவான் 16:33-ல் இயேசுகிறிஸ்து கூறியுள்ள வார்த்தை, எத்தனை பாடுகள் வந்தாலும் கிறிஸ்துவுக்காக வாழ்வதற்கு நம்மைத் தூண்டுகிறது. 1 தெசலோனிக்கேயர் 3:3-ல் 'உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதால் வரும் ஆசீர்வாதங்கள், மேன்மைகள் இவைகளுக்காக மட்டும் நாம் அவரால் தெரிந்துகொள்ளப்படவில்லை, அவருடைய பணியைச் செய்வதால் வரும் பாடுகள், உபத்திரவங்களுக்காகவும் தெரிந்துகொள்ளப் பட்டிருக்கிறோம் என்பதை இவ்வசனங்களின் மூலம் பவுல் நமக்கு உறுதிப் படுத்துகிறார். அத்துடன் கிறிஸ்துவை விசுவாசித்ததின் நிமித்தம் பாடுகளைச் சந்தித்த தெசலோனிக்கேய சபைக்கு அதை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளையும் அவர் கீழ்க்காணும் விதங்களில் தருகிறார்.

## 1 பாடுகள் – பயப்படுத்த அல்ல, பலப்படுத்த:

முதல் தலைமுறை கிறிஸ்தவர்களான தெசலோனிக்கேய திருச்சபை விசுவாசிகளுக்கு 'உபத்திரவம்' என்பது இதுவரை அவர்கள் சந்தித்திராத ஒன்று. அப்போஸ்தலர் 17:2,3-ல் பவுல் அன்று அவர்களுக்கு 'கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து' போதித்ததினால், அச்சபையினர் விசுவாசத்தில் நிலைத்து நின்றார்கள். ஆனால், இன்றைக்கு ஆசீர்வாதம் ஒன்றையே பிரதானமாகக் காண்பித்து உபதேசிப்பதினால், பாடுகள் வரும்போது கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் நிலைத்து நிற்பது கடினமாகிறது. எனவே கிறிஸ்துவுக்காய் வாழ, உழைக்க அர்ப் பணிக்கும்போது பாடுகளும் உபத்திர வங்களும் நிச்சயம் வரும் என்பதை நாம் நமது முதல் தலைமுறை விசுவாசிகளுக்குத் திட்டவட்டமாகக் கூறி, அச்சூழ்நிலைகளில் கிறிஸ்துவுக்காக நிலைத்து நிற்க அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

பின்பு உபத்திரவத்தைச் சந்தித்த தெசலோனிக்கேய திருச்சபை விசுவாசி களைப் பார்த்து பவுல், "நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றினீர்கள்; மற்ற விசுவாசிகளுக்கு மாதிரியானீர்கள்; விக்கிரகங்களைவிட்டு தேவனுக்கு ஊழியம் செய்ய மனந்திரும்பினீர்கள்; இயேசு பரலோகத்திலிருந்து வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் (1தெச.1:6-10). ஆகையால் பாடுகளைக் கண்டு பயப்படாதிருங்கள்'' என்று சொல்லி உற்சாகப்படுத்துகிறார். இன்று பணித்தளங்களிலும், நாம் வாழும் பகுதிகளிலும் சுவிசேஷப்பணிக்கு எதிர்ப்புகள் அதிகரித்துக்கொண்டே போகிற நிலையில், இயேசுகிறிஸ்துவைப்போல, அப்போஸ்தலர்களைப் போல உபத்திரவங்களைச் சந்தோஷமாய் சகிக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

பாடுபடுகிறதினால் தெசலோனிக்கேய சபையினர் விசுவாசத்தில் பெலனிழந்து போய்விடுவார்களோ என்று நினைத்த பவுல், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் உபத்திரவம் வருவது புதிதல்ல என்பதை 1 தெசலோனிக்கேயர் 2:14-ல் 'ஏற்கனவே அவர்களுக்கு முன்பாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட யூதேயா தேசத்து கிறிஸ்தவ சபையினர், கிறிஸ்தவரல்லாத யூதர்களாலே மிகவும் உபத்திரவப்படுத்தப்பட்டார்கள்' என்றும், அப்போஸ்தலர் 14:22-ல் 'அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்' என்றும் கூறி அவர்களைப் பலப்படுத்துவதைப் பார்க்கிறோம். நமது இந்தியாவைப் பொருத்தவரையில் இயேசுகிறிஸ்துவின் சீஷன் தோமா தொடங்கி, தொடர்ந்து அயல் நாடுகளிலிருந்து வந்த மிஷனரிகளும் இழப்புகள், அவமானங்கள் போன்ற அநேகப் பாடுகளை அனுபவித்து, இரத்த சாட்சிகளாய் மரித்தார்கள். அதுபோல இன்று கிறிஸ்துவிற்காய் பணி செய்யும்போது கொல்லப்படுதல், சிறையிலடைக்கப்படுதல், ஒதுக்கி வைக்கப்படுதல் போன்ற பாடுகள் யாவும் நமக்குப் புதிதானதல்ல என்பதை நாமும் நன்குணர்ந்து பயப்படாமல் பலங்கொண்டு, திடமனதாய் ஊழியத்தில் முன்னேறிச் செல்வோம்.

## 2 பாடுகள் – தரிசனத்தைக் குலைத்துப் போட அல்ல, கூர்மைப்படுத்த:

நாம் பூமியிலே வாழ்கிற நாட்களில் சந்திக்கிற அனைத்து வேதனை, துன்பம், நிந்தைகளும் நாம் கிறிஸ்துவுக்காக படுகிற பாடுகள், உபத்திரவங்கள் என்று எண்ணுவது சரியானதல்ல. ''பெலிஸ்தர் சிம்சோனைப்பிடித்து, அவன் கண்களைப் பிடுங்கி, அவனைக் காசாவுக்குக் கொண்டுபோய், அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குபோட்டுக் சிறைச்சாலையிலே மாவரைத்துக் கொண்டிருக்க வைத்தார்கள்'' என்று நியாயாதிபதிகள் 16:21-ல் வாசிக்கிறோம். இப்பாடுகள் அனைத்தும், ஆண்டவர் அவனைத் தெரிந்துகொண்ட நோக்கத்தை விட்டு அவன் திசைமாறியதால் உண்டானது என்பதை நாம் நம் வாழ்வில் எச்சரிப்பாகக் கொள்ளவேண்டும். சிம்சோன் தன் இஷ்டப்படி வாழ்ந்ததால், அவன் தேவன் தன்னை அழைத்த தரிசனத்தைக் குலைத்துப்போட்டு, தேவ தெரிந்தெடுப்பின் மகத்துவத்தை இழந்துபோனான். அதே வேளையில், யோசேப்போ, தன் வாழ்வில் ஏற்பட்ட பல எதிரான சூழ்நிலைகள் மத்தியிலும், தன் எதிர்காலத்தை ஆளுகிற ஆண்டவர் தன்னோடிருக்கிறார் என்று அவனுக்குள்ளிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை, அவனை அவனது தரிசனத்திலிருந்து சிறிதும் அடிபிறழாமல் நிலைத்து நிற்கச்செய்தது. அவன் அநுபவித்த தண்டனை, அவமானம், பதவி இழப்பு, எல்லாவற்றிக்கும் மேலாக சிறையிருப்பு, இந்தப் பாடுகள் அனைத்தும் தேவ தெரிந்தெடுப்பின் நோக்கத்தின்படி யோசேப்பு நடக்கச் சித்தம் கொண்டதால், அவன் வாழ்வில் நிகழ்ந்தவைகளாகும். ஆகவே தேவன் நம்மை எதற்காகத் தெரிந்துகொண்டாரோ, அதை நிறைவேற்றுவதினால் வரும் பாடுகளையும் உபத்திரவங்களையும் நாம் யோசேப்பைப் போல சகித்து தேவ தரிசனத்தைக் குலைத்துப்போடாமல் கிறிஸ்துவுக்கேற்ற நற்சாட்சிகளாய் வாழ்வோம்.

## 3 பாடுகள் – கிறிஸ்துவை விட்டு விலக அல்ல, அவரில் வேரூன்ற:

இறுதியாக, கிறிஸ்தவ வாழ்வு என்பது விளையாட்டு களமல்ல, அது ஒரு போர்க்களம் போன்றது. இயற்கை சீற்றங்கள் அடிக்கடி நிகழும் பகுதிகளில் வளரும் மரங்களின் வேர்கள் ஆழமாக வேரூன்றி உறுதியாக இருப்பது போல, பாடுகளைச் சகிப்பவர்களின் விசுவாச வேரும் அசைக்க முடியாதபடி மிக ஆழமாக இருக்கும் என்பதே உண்மை. நாம் சுவிசேஷம் அறிவிப்பதற்காய் தெரிந்துகொள்ளப்பட்ட சுவிசேஷகர்கள் மட்டுமல்ல, கிறிஸ்துவுக்காய் பாடநுபவிக்க வேண்டிய போர்வீரர்களும்கூட. மேலும், நாம் கிறிஸ்துவின்மீது என்றைக்கு நம்பிக்கை வைக்க ஆரம்பிக்கிறோமோ, அன்றிலிருந்தே பாடுகளின் மத்தியிலும் நாம் அவருடன்கூட இணைபிரியாமல் பயணிக்க வேண்டும் என்று ஆழமாய் மனதில் உறுதிகொள்ள வேண்டும். கிறிஸ்துவுக்காகப் பணி செய்யும் மிஷனரிகள் தங்களின் உறவுகளைத் துறந்து, இடம் பெயர்ந்து, ஒரு புதிய கலாச்சாரத்தின் பின்னணியிலே மொழி, உணவு மற்றும் உடை மாற்றம் போன்ற மாற்றங்களை மனங்கோணாமல் ஏற்றுக்கொண்டு, பசி, பட்டினி, வியாதிகளின் நெருக்கத்திலும், தங்கள் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்காக சிறு வயதிலேயே அவர்களைப் பிரிந்துவாழ்ந்து, உச்சகட்டமாக, தங்களது

சொந்த ஊருக்குக் கூட திரும்பிச் செல்லாமல், தாங்கள் பணி செய்கிற இடத்திலேயே மரிக்கும் நிலையும் அவர்களுக்கு ஏற்படலாம். ஆயினும், கிறிஸ்துவுக்காகப் பணிசெய்யும் நாம் எத்தகு பாடுகளைக் கண்டும் பின்னடையாமல் கிறிஸ்துவில் வேரூன்றி நிற்க வேண்டும்.

பிலிப்பியர் 3:10-ன்படி, நாம் இயேசுவையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நாம் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்கும் தகுதியாகும்படிக்கு, கிறிஸ்துவுக்காக நாம் அனுபவிக்கும் பாடுகளும் உபத்திரவங்களுமே நம்மை அதற்குத் தகுதிப்படுத்துகிறது. மேலும், ரோமர் 5:3-ல் கூறப்பட்டுள்ளப்படி உபத்திரவம் பொறுமையையும், தேவன்மீது நம்பிக்கையையும் உண்டாக்குவதோடு, தேவப் பிரமாணங்களை நாம் கற்றுக் கொள்ளவும், அவரது வார்த்தைகளைக் காத்துக்கொள்ளவும் நமக்கு உதவுகிறது. எனவே பாடநுபவிக்க தெரிந்துகொள்ளப்பட்ட நாம், வேத வசனங்களின் மூலம் தைரியத்தையும், ஜெபிப்பதின் மூலம் தேவன் தரும் வல்லமையையும் தரித்துக்கொண்டு, இறுதிவரை தளராது உறுதியாய் விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். பாடுகள் நிறைந்த இவ்வோட்டத்தில் நம்மைப்போல ஓடுகிற மற்றவர்களையும் நாம் நமது ஜெபத்தில் தாங்குவோம். அதற்கு தேவன் நமக்கு அருள் புரிவாராக! ஆமென்.

**திரு. E.D.A. ஜான் தன்ராஜ்,**
கௌரவ விரிவுப்பணி செயலர், மதுரை - தெற்கு.



## பணித்தள விஜயம் மற்றும் ஆலயப்பிரதிஷ்டை

சென்னை - அம்பத்தூரிலிருந்து 33 பேர் கொண்ட குழுவாக 2023, ஏப்ரல் 15 முதல் 19 வரை மகாராஷ்டிராவிலுள்ள பெயின்ட் மற்றும் குஜராத்திலுள்ள கப்ராடா பணித்தளங்களைப் பார்வையிடச் சென்றோம். தேவ நாமம் மகிமைப்படும்படி 16.04.2023 ஞாயிறன்று மாலை கப்ராடாவிலுள்ள அஸ்டுல் கிராமத்தில் வைத்து நடந்த ஆலயப்பிரதிஷ்டை ஆராதனையில் 400-க்கும் மேற்பட்ட விசுவாசிகள் கூடி வந்தனர். இந்த ஆலயம் திரு. A. ராஜின், திரு. C. எபிநேசர் மற்றும் திரு. V. செல்வின் அவர்களின் ஆதரவினால் கட்டப்பட்டு, திரு. A. ராஜின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பின்பு 6 கிராமங்களிலுள்ள ஆலயக்கூடுகைகளில் பங்கேற்று செய்தியளித்தோம். அந்த ஆலய விசுவாசிகளின் உயிரோட்டமுள்ள ஆராதனைகள், பாடல்கள் மற்றும் ஜெபம் எங்களை மிகவும் ஆச்சரியப்படுத்தியது. அத்துடன் நமது மகாராஷ்டிராவிலுள்ள சரஸ்மால் விடுதி மாணவ, மாணவிகள் பள்ளிக்குச் செல்லும்முன் அதிகாலையில் எழுந்து தேவனைப் பாடி துதித்து, ஜெபித்த காட்சி எங்கள் உள்ளத்தை வெகுவாய்த் தொட்டது. அவர்களது கலை நிகழ்ச்சியும் சிறப்பாக இருந்தது. பின் இடிக்கப்பட்ட போர்பாடா ஆலய நிலத்தில் அனைவரும் கைகோர்த்து நின்று கண்ணீரோடு ஜெபித்து விட்டு, புதிய ஜெபக்குழுக்களை உருவாக்கி, மிஷனரிப்பணிகளுக்காக அதிகம் ஜெபிப்போம் என்று தீர்மானித்து, சென்னை திரும்பினோம்.

# நமது மிஷனரிகளின் அருட்பொழிவு ஆராதனை



நமது தேவனின் அளவற்ற கிருபையால், வட இந்திய பேராயம் - அமிர்தசரஸ் மறை மாவட்டத்தின் பிஷப் மாமறைதிரு. அறிவர் பிரதீப் குமார் சாமந்தராய் அவர்கள், அமிர்தசரஸில் உள்ள தூய ஆண்ட்ரூஸ் பேராலயத்தில் வைத்து கடந்த 2023 மே 28-ம் தேதியன்று, நமது மிஷனரிகளில் 24 பேரை டீக்கன்களாக அருட்பொழிவு செய்தார்கள். இவ்வாராதனைக்கு முன் மே 24-ம் தேதி முதல் 27-ம் தேதி வரை பட்டாலாவில் உள்ள BIT கல்லூரியில் அருட்பொழிவு ஆராதனைக்கான ஆயத்த ஆவிக்குரிய கூட்டமொன்று நடத்தப்பட்டது. இக்கூட்டம் நேர்த்தியாக திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டமையால், இக்கூட்டத்தில் கலந்து கொண்டோர் ஆவிக்குரிய ரீதியாக மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

திருச்சபை நாள்காட்டி அடிப்படையில் மே 28-ம் தேதி மிகவும் குறிப்பிடத்தக்க பெந்தெகொஸ்தே திருநாள் ஆகும். எனவே, அதையொட்டி இந்த அருட்பொழிவு ஆராதனை நடத்தப்பட்டு, பிஷப் மாமறைதிரு. அறிவர். P.K. சாமந்தராய் அவர்கள் நமது மிஷனரிகள் மீது கரங்களை வைத்து அருட்பொழிவு அருளினார்கள். அருட்பொழிவு பெற்ற நமது மிஷனரிகளின் குடும்பத்தினரும் இம்மகிழ்ச்சியான சிறப்பு ஆராதனை வேளையில் கலந்து கொண்டனர். நமது பொதுச்செயலாளர் அருட்திரு. ஜாண் பெர்லின் அவர்கள், நமது இயக்கத்தின் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், அமிர்தசரஸ் மறைமாவட்டத்தின் தலைவர்கள் மற்றும் அதன் பொறுப்பாளர்களுக்கு நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்தார்கள். அறியாத மக்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச்செல்லும் மிஷனரிப்பணியை மேம்படுத்துவதற்கு, இந்த மகத்தான பேராதரவை நல்கிய அன்புக்குரிய பிஷப் மற்றும் திருச்சபை தலைவர்களுக்கு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு தனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

**- திரு. ரமாமுனி J.B.V. பிரசாத்,**
பிராந்திய விரிவுப்பணி செயலர், ஆந்திரப் பிரதேசம்.

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு - கோவை**

## ஸ்கேன் குடும்பக்கூடுகை

நாள்: 09.07.2023 - ஞாயிற்றுக்கிழமை நேரம்: காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை இடம்: C.S.I. கிறிஸ்துநாதர் ஆலயம், திருச்சி ரோடு, கோவை.

***குறிப்பு:*** சிறுவர்கள் மற்றும் இளம் வாலிபர்களுக்கு தனி கூடுகை உண்டு. ஸ்கேன் & சிறுவர் உண்டியல்களைக் கொண்டுவந்து படைக்கவும்.

தொடர்பு: 79043 26930

தமிழ்நாடு

# மாநில முகாம் 2023

## நான் உன்னைத் தெரிந்துகொண்டேன். ஆகாய் 2:23

**''உங்களை எனக்கெனத் தெரிந்து கொண்டேன்; உலகத்தில் உங்களைப் பிரித்தெடுத்தேன்...''** என்ற கானத்தின் எதிரொலி சேர்வராயன் மலையடிவாரம் அமைந்த பெத்தேல் வளாகமெங்கும் ஒலித்துக்கொண்டிருந்தது. ஆண்டுதோறும் இத்தரிசன பூமியில் தேவ சத்தத்தைக் கேட்கவும், ஆவியில் மகிழ்ந்து அவர் சித்தம் நிறைவேற்றவும் ஆசையாய் அணி திரளும் விசுவாசிகள் இவ்வாண்டும் பேருந்துகளிலும், சிறப்பு வாகனங்கள் மற்றும் சொந்த வாகனங்களிலும் அணியணியாய் டேனிஷ்பேட்டையிலுள்ள பெத்தேலில் சங்கமமாயினர். சிரித்த முகத்தோடும், முகங்கோணா சேவையோடும் வரவேற்ற செங்குன்ற தலைவர்களின் வரவேற்பும், பதிவும் வந்த அனைவரையும் பூரிக்க வைத்தது. ஓவியர் திரு. Y. நவநீதர் அண்ணன் அவர்களின் சிறப்பு முயற்சியால் கூடுகையின் வளாகமும், பிரதான அரங்கும் சிந்திக்கத்தூண்டும் ஓவியங்களாலும், நாம் சந்திக்கின்ற மக்களினங்களின் படங்களாலும் வெகுவாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது.



மதுரை இசைக்குழுவினரின் மதுரக் குரலுடன்கூடிய இனிய இசையுடன் 'துவக்க நிகழ்ச்சி' இனிதே ஆரம்பித்தது. இயக்கத்தின் தலைவர் திரு. C. ரெஜினால்டு அவர்கள், சிறப்புச் செய்தியாளர்களையும், பெத்தேல் இயக்குனரையும் மற்றும் அமைப்புக்குழுவினரையும் பூச்செண்டுடன் வரவேற்றார்கள். முகாமின் கருப்பொருளான ''நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்!'' ஆகாய் 2:23, இத்தலையங்கத்தை எளிதில் புரியும்படி நவநீதர் அண்ணன் தன் குழுவினருடன் செய்து காண்பித்த நிகழ்ச்சி பெரும் சவாலாக இருந்தது. ஆண்டுதோறும் முகாமிற்கென சிறப்பாக மெட்டமைத்து உருவாக்கப்பட்ட 10 பாடல்கள் அடங்கிய “பென் டிரைவ்” தகவல் தொடர்புத்துறை செயலர் திருமதி. மெர்சி செல்வின் அவர்களின் அறிமுகத்தோடு, முன்னாள் பொதுச் செயலாளர் அருட்திரு. I.K. ஆபிரகாம் அண்ணன் அவர்களால் மங்கலப்படைப்பு செய்யப்பட்டு, அது அருட்திரு. V.T. ஜான்சன் அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டது. நம்மை விட்டுக்கடந்து தேவ ராஜ்யம் சென்றுள்ள நமது ஊழியர்கள் ஜெபத்துடன் நினைவுகூரப்பட்டனர். பணிநிறைவு பெற்ற ஊழியர்களுக்கு சால்வையும், நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டு அவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இவ்வாண்டு மகாராஷ்டிராவிலிருந்து பாவ்ரா இன விசுவாசிகள், உத்தரப்பிரதேசத்திலிருந்து சிறை சென்ற நமது விசுவாசிகள், உட்கல் பிராந்தியத்திலிருந்து ஹோ இன

விசுவாசிகள், அஸோம் மாநில மிஸ்ஸிங் இன விசுவாசிகள் மற்றும் குஜராத் ஜாவ்டா பள்ளி மாணவர்கள் என தேசத்தின் ஒவ்வொரு எல்லைகளிலிருந்தும் கண்கவர் கலாச்சார உடைகளுடன்கூடிய விசுவாசிகளின் அணிவகுப்பு முகாமில் கலந்துகொண்ட 3140 நபர்களின் கண்ணுக்குள்ளும், நெஞ்சுக்குள்ளும் தஞ்சம் கொண்டது.



துவக்க நாளின் முதல் செய்தியை முன்னாள் பொதுச்செயலாளர் அருட்திரு. I.K. ஆபிரகாம் அண்ணன் அவர்கள் கொடுத்து, தங்களைத் தெரிந்துகொண்ட தேவனுக்காக வாழ மக்களைத் தீர்மானம் எடுக்க வைத்தார்கள். உணவுக்குப்பின் இளைஞர், இளம் வாலிபர், சிறுவர்களுக்கென தனித்தனி கூட்டங்கள் நடைபெற்றன. 422 இளைஞர்களும், 551 இளம் வாலிபர்களும், 425 சிறுவர்களும் கலந்து கொண்டனர். மதிய உணவிற்குப் பின்னர் பெரியவர்களின் கூடுகையில் நடைபெற்ற அஸோம் மாநில மிஸ்ஸிங் இன விசுவாசிகளின் கலாச்சார நடனமும், பணித்தளப் பகிர்வும் அனைவரையும் பரவசப்படுத்தியதோடு, பாரத்தோடு ஜெபிக்கவும் ஊக்குவித்தது. மாலை சந்தியா வேளை மகிபனின் மகத்தான தொடுதலின் வேளையாக அமைந்தது. சிறப்புச் செய்தியாளர் அருட்திரு. V.T. ஜான்சன் அவர்கள் தனது அனுபவ சாட்சியுடன், செருபாபேலை அழைத்தவர், யோசுவாவைத் தெரிந்து கொண்டவர் தங்களைத் தெரிந்து கொண்டதின் நோக்கத்தைக் கேட்போர் உணர்ந்துக்கொள்ளுமாறு உணர்த்திய செய்தி அநேகரைத் தொட்டது.




முகாமின் இரண்டாம் நாளாகிய "உபவாச நாள்" அன்று சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை வயது வித்தியாசமின்றி அநேகர் உபவாசித்து, கண்ணீரோடு தேசத்தின் ஆசீர்வாதத் திற்காய் மற்றும் ஊழியத்தின் சவால்களுக்காய் ஜெபித்தார்கள். பாவ்ரா, ஹோ, சமார், மிஸ்ஸிங், குக்னா இன விசுவாசிகளின் கலாச்சார நடனத்துடன் கூடிய ஊழியப்பகிர்வுகள் அநேகருக்கு தேசத்தில் தேவன் நிகழ்த்தி வருகின்ற மகிமையான விளைவுகளை உணர்ந்து துதிக்க உதவியது. அதுமாத்திரமல்ல, மாலை சந்தியா வேளை நவநீதர் அண்ணனின் ஒலி, ஒளி காட்சிகள் நமது துவக்க கால ஊழிய நினைவுகளையும் தற்கால உக்கிராணத்துவத்தையும் உணர்ந்து அர்ப்பணிக்கவும் உதவியது. ஒவ்வொரு கூடுகையின் முடிவிலும் திரு. A.P. கனகராஜ் அண்ணன் அவர்களின் தலைமையில் அமைந்த ஆலோசனைக் குழுவினர் அர்ப்பணித்தவர்களுக்கு ஆலோசனை வழங்கி அவர்களை உற்சாகப் படுத்தினர்.

முகாமின் மூன்றாம் நாளின் செயல்படும் நேரம் பகுதியில் நம் ஊழியத்தைத் தொடரோட்டமாய் தங்கள் சக மக்களுக்குக் கொண்டுச்செல்லும் நமது சுதேச ஊழியர்களின் ஊழியச்செயல்பாடு மற்றும்

அவர்களின் பணிநிலைகளைக் குறித்து மிஷனரிகள் பகிர்ந்ததோடு, அவர்களுக்கு நாம் சமிதி மூலமாகக் கொடுக்கும் மாதாந்திர ஊக்கத்தொகைக்கான காணிக்கையையும், வாக்கையும் கொடுத்துத் தாங்கும்படி மக்களுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டது. வந்திருந்த அனைவரும் ஜெபத்தோடு காணிக்கையாக ரூ.2,37,680/- மற்றும் ரூ.35,000/-க்கான காசோலை, தங்க ஆபரணங்கள், ரூ.27,81,130/-க்கான வாக்குத்தொகையையும் கொடுத்து ஊழியம் தொய்வில்லாமல் நடைபெற ஆதரவு கரம் நீட்டினர். மாவட்ட வாரியாகப் பிரிந்து தங்கள் பகுதிகளிலிருந்து வந்த ஆதரவாளர்களோடு இவ்வாண்டில் புதிய ஜெபக்குழுக்கள் உருவாக்கும் அவசியத்தையும், இரண்டாம் கட்ட தலைவர்களைக் கண்டுபிடிக்கவும், இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர்களையும் ஊழியத்தில் இணைக்கவும் திட்டமிட்டனர். இதில் அநேகரின் மனமொத்த ஈடுபாடு சிறப்பாக இருந்தது.



மதிய வேளையில் நமது இயக்கத்திலுள்ள பல்வேறு சிறப்பு ஊழியப் பிரிவுகளைச் சார்ந்த ஊழியர்கள் (specialized ministry) தங்களின் ஊழிய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டது, முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு நமது இயக்கம் எவ்வாறு ஒவ்வொரு தரப்பு வயதினருக்கேற்ப ஊழியங்களைச் சிறப்புடன் செய்து வருகிறது என்பதை அறிந்து தேவனைத் துதிக்க உதவியது. முகாமின் இறுதி சந்தியா வேளையில் தேவ செய்தியை நமது இயக்கத்தின் பொதுச்செயலாளர் அருட்திரு. S. ஜாண் பெர்லின் அவர்கள் பகர்ந்து கொண்டார்கள். இதன்பொருட்டு அநேகர் பாரத்தோடும், கண்ணீரோடும் தங்களை மறுபிரதிஷ்டை செய்தனர். முகாமின் இறுதி நாள் அதிகாலை 4.30 மணிக்கு பரிசுத்த திருவிருந்துடன் நமது தமிழ்நாடு மாநில முகாம் சிறப்புடன் நிறைவுற்றது. 18 போதகர்கள் தூய பந்தியில் உதவி செய்தனர். அருட்திரு. V.T. ஜான்சன் அவர்களின் செய்தி அநேகரை ஊக்கப்படுத்தி, தேவனுக்காய் வைராக்கியமாய் வாழ ஒப்புக்கொடுக்க உதவி செய்தது.



இம்முகாமில் இளைஞர், இளம் வாலிபர்கள், சிறுவர்கள் ஜெப நாட்களில் ஜெப நிலையம் அமைத்து ஜெபித்ததுடன் 55 சிறார்கள் ஜெப நாட்களில் உபவாசித்து ஜெபித்தது, நம்மை மேலும் பிரமிக்க வைத்தது. இளைஞர் கூடுகையில் 72 ஆலோசகர்களும், 20 தன்னார்வ தொண்டர்களும் முகாமின் 3 நாட்களும் ஜெபித்து சிறப்பான ஆலோசனைகளைக் கொடுத்தது, மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. இதன் விளைவு 63 நபர்கள் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும், 168 புதிய ஜெபக்குழுக்கள் உருவாகவும், 48 நபர்கள் முழுநேரப் பணிக்கு அர்ப்பணிக்கவும் தேவன் கிருபை பாராட்டினார். ரூ.26,210/-ஐ காணிக்கையாகவும், சிறுவர் விடுதி கட்ட ரூ.3,31,000/-ஐ வாக்குத்தொகையாகவும் பெற்றோம். இளம் வாலிபர் கூடுகையிலும்

பிள்ளைகள் 92 ஜெபக்குழுக்களை உருவாக்கவும், 28 பேர் தங்களை முழுநேர ஊழியத்திற்கும் அர்ப்பணித்தனர். இதனை 36 புதிய தன்னார்வ தொண்டர்கள் ஏற்கனவே இளம் வாலிபர் ஊழியத்தி லிருந்த 31 தன்னார்வ தொண்டர்களோடு இணைந்து மிகவும் அழகாய் நடத்தினார்கள். இதில் ரூ.7,732/-ஐ காணிக்கையாகப் பெற்றோம். சிறுவர்கள் கூட்டங்களில் 84 சிறார்கள் முதல்முறையாக கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். 24 பேர் தேசத்திற்காகக் குழுவாய்க்கூடி ஜெபிக்கவும், 8 பேர் முழுநேர ஊழியம் செய்யவும் தங்களை அர்ப்பணித்தனர். பிள்ளைகளைக் கையாள சிறப்பு ஆலோசனை நேரம் பெற்றோர்களுக்கு வழங்கப்பட்டது. சிறுவர்கள் மூலம் காணிக்கையாக ரூ.13,367/- சேகரிக்கப்பட்டு, புதிதாக 21 உண்டியல் களை அவர்கள் பெற்றுச்சென்றனர்.

இவ்வருட மாநில முகாம் மிகவும் ஆசீர்வாத மாக நடைபெற முழுக்காரணமான முகாம் கன்வீனர் திரு. தேவராஜ், இணை கன்வீனர் திரு. டேனியல் அருள்ராஜ் மற்றும் திரு. ஆலன் & திரு. தனசிங், பொருளாளர் திரு. பிரின்ஸ் முத்துராஜ், இணை பொருளாளர் திரு. செல்வராஜ் ஆகிய யாவரும் மிகச்சிறப்பாகச் செயல்பட்டார்கள். உணவுப்பொறுப்பை எடுத்துக்கொண்ட தென் சென்னை குழுவினர் மேலும் இம்முகாமின் வெற்றிக்குப் பெரிதும் உழைத்த அனைத்து முழுநேர ஊழியர்கள், கௌரவ விரிவுப்பணி செயலர்கள், ஜெபக்குழுத்தலைவர்கள் மற்றும் பெத்தேல் நிர்வாகத்தினர் அனைவருக்கும் எங்களது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**- அருட்திரு. S. இம்மானுவேல் ரஞ்சித்சிங்,**
தமிழ்நாடு & பாண்டிச்சேரி,
விரிவாக்கப்பணி செயலாளர்.

# ஆலயப்பிரதிஷ்டை



மாங்கனிக்கும், உருக்கு இரும்புக்கும் பெயர்போன சேலம் மாவட்டத்திலிருந்து 4 பேர் கொண்ட குழுவாக நாங்கள் ஜார்க்கண்ட், பெல்டிஹோ பணித்தளத்தில் உள்ள சீத்தாகட் கிராமத்திற்குச் சென்றோம். பின் அங்கு கட்டப்பட்டுள்ள ஆலயம் ஏப்ரல் 18-ம் தேதி திரு. ஜெபசிங் அவர்களால் ஜெபித்து பிரதிஷ்டை செய்யப்பட்டது. அவ்வாலயம் கட்டு வதற்கு நிதியுதவி அளித்த திரு. ஜெபசிங் அண்ணன் அவர்களின் குடும்பத் திற்காக கர்த்தரைத் துதிக்கிறோம்.

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு - மதுரை**

## வருடாந்திர ஸ்கேன் குடும்பக்கூடுகை

நாள்: 09.07.2023 - ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 5 மணி
இடம்: LPN பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மூன்றுமாவடி, கே.புதூர்.
தொடர்பு: 98433 56028

# பஸ்தி தினம்!



கன்னியாகுமரி மாவட்டம், திக்கணங்கோடு பகுதியிலுள்ள பரப்புவிளை என்ற இடத்தைச் சார்ந்த ஆசிரியரான திரு. ஹில்கியா அண்ணன், தன்னுடன் பணியாற்றிய ஓவிய ஆசிரியரான திரு. நவநீதர் அண்ணன் மூலம் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஆரம்பக்கால ஊழியங்களைக் குறித்து அறிந்தார். அதோடு நிறுத்தாமல், நமது மூத்த மிஷனரியான திரு. ஹாரிஸ் ஹில்டன் அண்ணன் மூலம் பெற்ற ஜெபக்குறிப்புகளைக் கொண்டு ஹில்கியா அண்ணனும், நவநீதர் அண்ணனும் கூடி ஊழியத்திற்காக ஜெபிக்க ஆரம்பித்தனர். ஒருமுறை தூத்துக்குடி மாவட்டம், பண்ணைவிளையில் நடைபெற்ற நமது இயக்க கிதியோனியர் முகாமில் சகோ. ஹில்கியா தனது மனைவியுடன் கலந்து கொண்டார். அக்கூட்டத்தில், இவர் தென் பசிபிக் கடலின் நியூ ஹைப்ரைட்டிஸ் தீவுகளில் வாழும் நரமாமிசம் உண்பவர்களின் மத்தியில் ஊழியம் செய்த ஸ்காட்லாந்து மிஷனரியான ஜான் G. பேட்டனின் சவாலான வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொண்டார். மேலும் சகோ. P. சாமுவேல் மற்றும் சகோ. எமில் ஜெபசிங் அவர்களின் தேவ செய்தி களின் மூலம் தேவன் தன்னை முழுநேர ஊழியப்பணிக்கென அழைப்பதை உணர்ந்து, அந்த அழைப்பிற்கிணங்கி, சகோ. ஹில்கியா வட இந்தியாவில் மிஷனெரிப்பணி செய்ய தன் வாழ்வை முழுவதுமாக தேவனிடம் ஒப்படைத்தார். அதே சமயம், திருமதி. டெய்சி ஹில்கியாவுடனும் தேவன் இடைப்பட்டு, அவரும் தன்னை மிஷனரிப்பணிக்கென அர்ப்பணித்தார்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு திரு. ஹில்கியா தம்பதியரை 1971, ஜுலை 19-ம் தேதியன்று தூத்துக்குடியிலிருந்து வட இந்தியாவிற்கு குடும்பமாக அனுப்பி வைத்தது. இவர்கள் 1971, ஜுலை 23-ல் பஸ்தியில் கால் பதித்தனர். இந்த நாள் நமது இயக்க வரலாற்றில் மறக்க முடியாத ஓர் பொன்னாளாகும். இந்த நாளை நாம் 'பஸ்தி தினம்' என நினைவுகூர்ந்து வருகிறோம். அருட்திரு. ஹில்கியாவின் குடும்பம், பஸ்தியிலுள்ள சீலோன்-இந்தியா ஜெனரல் மிஷனின் பழைய கட்டிடமொன்றில் தங்கி, அங்குள்ள சமார் இன மக்கள் மத்தியில் தங்களது ஊழியத்தை ஆரம்பித்தனர். இத்தம்பதியினர் தினமும் அதிகாலை 4 மணிக்கு எழுந்து, அன்றைய தினம் தாங்கள் செய்யப்போகும் ஊழியத் திற்காகத் தவறாமல் ஜெபிப்பதைத் தங்களது விருப்பப்பழக்கமாகக் கொண்டிருந்தனர். அண்ணனது சிறந்த ஊழியத்திற்கான இரகசியமே, இவருடைய அதிகப்படியான முழங்கால் யுத்தம்தான். மற்றும் 'தேவனுடைய வார்த்தை ஒருக்காலும் அதிக

பலனைத் தராமல் வெறுமையாகத் திரும்பாது' (ஏசா.55:11) என்பதும் இவருடைய மிக உறுதியான நம்பிக்கை. இந்த நம்பிக்கையை முன்நிறுத்தி, அருட்திரு. ஹில்கியா சுவிசேஷ கைப்பிரதிகளின் மூலம் தான் தினந்தோறும் சந்திக்கும் எந்த மனிதர்களிடத் திலும் இயேசுகிறிஸ்துவின் அன்பைப் பகிர்ந்து கொள்ள தவறியதே இல்லை. இவர் ரயிலில் பயணம் செய்யும்போதும்கூட அனைத்துப் பெட்டிகளுக்கும் சென்று, அனைவரிடத்திலும் கைப்பிரதிகளை விநியோகித்து கிறிஸ்துவின் அன்பைப் பகிர்ந்து கொள்வார். அத்துடன் சுவிசேஷத்தை அங்குள்ள பள்ளிகள், அரசு அலுவலகங்கள் மற்றும் நீதிமன்ற வளாகங்களுக்குச் சென்று அன்புடன் அறிவிப்பார். இவ்வாறு தனித்தாள் ஊழியம் இவர்களது வாழ்வில் நீங்காத இடம் பெற்றிருந்தது.

அநேக முயற்சிகளுக்குப்பின், தேவ ஆவியானவர் ஒரு கொலை குற்றவாளியான அர்ஜுன் சௌபேவின் வாழ்வை இவர் மூலம் தொட்டார். அவரே நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முதல் வட இந்திய விசுவாசி ஆவார். பின்பு பன்ஹாட் கிராம பீட்டர் ஹரிராம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, பின்நாட்களில் இவர் நமது இயக்கத்தில் மிஷனரியாக இணைந்து பணிஓய்வு பெற்றார் என்பது அழகிற்கு அழகு சேர்க்கும் செய்தி ஆகும். இவ்வாறு எந்நாளும் அநேக கிராமங்களுக்கு அயராது மிதிவண்டியில் சென்று, நற்செய்தியின் மூலம் ஆத்தும அறுவடை செய்வது, அருட்திரு. ஹில்கியாவிற்கு ஓர் ஆனந்த அனுபவமாயிருந்தது.

இன்று அங்குள்ள கிராமங்களில் அமைந்திருக்கும் 2 பெரிய ஆலயங்களிலும், 8 வீட்டுச்சபைகளிலும் மக்கள் கிரமமாகக்கூடி தேவனை ஆராதித்து வருகின்றனர். 1971 முதல் 2023-ம் ஆண்டுகள் வரை அங்கிருக்கும் மொத்த விசுவாசிகளின் எண்ணிக்கை 1261 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்துள்ள விசுவாசிகளை மீண்டும் விசுவாசத்திற்குள் கொண்டு வருவதும், அவர்களை நல்லாவிக்குரிய விதத்தில் புத்துணர்வு பெறச்செய்வதும் மற்றும் இந்த பஸ்தி மாவட்டத்திலுள்ள திரளான மக்களுக்குச் சுவிசேஷத்தைக் கொண்டுச்சேர்ப்பதுமே, இப்பணித்தள ஊழிய வளர்ச்சி மீது நமக்கிருக்கும் பெரும் பாரமாகும். தற்சமயம் ஒரு ஊழியர் குடும்பமும், 2 சுதேச ஊழியர்களின் குடும்பங்களும் தேவப்பணியை அங்கிருந்து நிறைவேற்றி வருகின்றனர்.

ஊழியத்திற்கு "இங்கே பெரிதும் அநுகூலமான கதவு... திறக்கப்பட்டிருக்கிறது; விரோதஞ்செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்" என்று 1 கொரிந்தியர் 16:9-ல் கூறப்பட்டுள்ளபடி, தற்போது இங்குள்ள ஊழிய வாய்ப்பை நமது ஊழியர்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ளவும், ஊழியத்திற்கு விரோதமாய் எழும்புகிறவர்களின் கரங்களுக்கு அவர்கள் விலக்கிக் காக்கப்படவும் தொடர்ந்து ஜெபிப்போம்.

**- தகவல் தொடர்புத்துறை,** நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு.

## குடும்பக்கூடுகை 2023 - திண்டுக்கல்

**நாள்:** 22.07.2023 சனிக்கிழமை **நேரம்:** மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை

**நாள்:** 23.07.2023 ஞாயிற்றுக்கிழமை

**நேரம்:** காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை

**இடம்:** CSI - தூய பவுல் ஆலய பாரிஸ் ஹால், திண்டுக்கல்.





# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



திருமதி. S. பாக்கியமுத்து துரைராஜ் (Rtd.Tr.) (வயது–85) அவர்கள், கடந்த 23.05.2023 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர் திசையன்விளை பகுதியில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஜெபக்குழுத் தலைவியாகச் செயல்பட்டு, ஜெபக்குழுக்களை உருவாக்கியவர். மேலும் ஊழிய தேவைகளைச் சந்திப்பதில் முழுமனதோடு செயல்பட்டு, தேச மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபித்தவர். இவர் விட்டுச்சென்றுள்ள இவருடைய பிள்ளைகளின் குடும்பங்களுக்காக ஜெபித்துக்கொள்வோம்.



திருமதி. டெய்சி துரை (Rtd.Tr.) ( வயது–81 ) அவர்கள், கடந்த 31.05.2023 அன்று தேவ ராஜ்யத்திற்குள் பிரவேசித்தார்கள். இவர் திசையன்விளை பகுதியில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்; ஊழியர்களை உபசரிப்பதில் முதன்மையானவர். இவர் தனது பிள்ளைகளையும் ஊழியத்தில் ஈடுபடுத்தியுள்ளார். மிஷனரி மற்றும் குழந்தை ஆதரவாளராக ஆலயம் கட்டிக்கொடுப்பது, இரு சக்கர வாகனம் வாங்கிக் கொடுப்பது போன்ற ஊழியத்தேவைகளையும் சந்தித்தவர். ஜெபம் இவரது மூச்சு. இவர் விட்டுச்சென்றுள்ள மகன், மருமகள் மற்றும் பேரப்பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபித்துக்கொள்வோம்.



மறக்கமுடியாத மாமனிதர்கள்
உங்கள் கையில் உள்ளதா?
இப்பொழுது விற்பனையில்
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் வெளியீடுகள்
வாங்கிப் பயன்பெறுங்கள்!
திருச்சபை சந்திக்கும் சவால்களை அலசி ஆராய இந்த புதிய வெளியீட்டை வாங்கிப் பயன்பெறுங்கள்
சவால்
உலகமெங்கும் தேவ பணியினை நிறைவேற்றிய 50 மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு பாகம் – 1 நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் 73 மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு பாகம் – 2 ஆகியவை
மறக்கமுடியாத மாமனிதர்கள்
என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.
FMPB-யின் மைல் கற்கள்
மாபெரும் அறுவடை என்ற தலைப்பிலும் கிடைக்கும்.




இப்பொழுது விற்பனையில்
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்
பென்டிரைவுகள் வெளியீடு
VOL-1
காலத்தால் அழியாத மிஷனரித் தரிசனப் பாடல்களின் தொகுப்பு
2020 மாநில முகாம் பாடல்கள் மற்றும் 240 மிஷனரித் தரிசனப்பாடல்களின் தொகுப்பு
VOL-2
2022 மாநில முகாம் பாடல்கள் மற்றும் 450 மிஷனரித் தரிசனப் பாடல்களின் தொகுப்பு
VOL-3
VOL-4
காலத்தால் அழியாத மிஷனரித் தரிசனங்களைப் பெற்றிட வாங்கிப் பயன்பெறுங்கள்.
தொட்டுத்தொண்டேன்

## 1 ஜூலை சனி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. அலியாக்கிம் ஜெனா
திரு. ஹரமோகன் பிரபு தாஸ்
திரு. ஜுபராஜ் பர்தன், திரு. ஹென்றி K.
திருமதி. தீபிகா அலியாக்கிம்
திரு. சஞ்சய் குமார் பீரோ, திரு. மனோஜ் குமார் பானி
திருமதி. பிரின்சஸ் ரோஸிட்டா லக்ஷ்மணன்
திருமதி. ஜோதி நிர்மலா புஷ்பராஜ்
திருமதி. ஜகதீஸ்வரி பாலாஜி, திருமதி. ஊர்பசி டிகல்
திரு. தினேஷ் குமார், திரு. அருண் காந்தா

## ஜம்மு

### நரோத்: ஜீவர் ஜோஸ்வா & ஷேத்ரிமயூம் பிரியா தேவி

**துதிக்க:** சுவிசேஷம் 1160 பேருக்கு பறைசாற்றப்பட்டுள்ளது. அதில் 3 பேர் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கை செய்துள்ளனர். 14 இடங்களில் சத்சங் கூடுகைகளும், 19 இடங்களில் இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகளும் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன. ஜமில் சாக் கிராமத்தில் தொடங்கப்பட்டுள்ள புதிய ஆராதனைக்குழுக்களில் 3 குடும்பங்கள் கலந்து கொள்கின்றனர். நடக்க முடியாமலிருந்த 2 வயது சிரேயா ஜெபத்திற்குப்பின் நன்கு நடக்கிறாள். நமது மிஷனரிகள் ஜெபித்தபோது, விக்கியும் பூஜாவும் மாந்திரீகக் கட்டுகளின் சக்திகளிலிருந்து விடுபட்டுள்ளனர். நமது மிஷனரிகள் ஜெபித்து ஆலோசனைகளைக் கூறியதைக் கேட்டு, பத்ராஸ் தனது தற்கொலை எண்ணத்திலிருந்து மீண்டு வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பஞ்சாபி மற்றும் டோக்ரி மொழிகளில் நமது மிஷனரிகள் நற்புலமை பெற; மோகித் & ஊர்மிளாவிற்கு மழலை பாக்கியங்கள் கிடைக்க; தங்களது 2 பிஞ்சு குழந்தைகளையும் இழக்கக்கொடுத்து தவிக்கும் மனோஜ் & ரூபி நல்ல மனஆறுதல் பெறவும், விரைவில் அவர்களுக்கு மீண்டும் ஆரோக்கியமான அழகிய குழந்தை செல்வம் கிடைக்கவும்; ரீனா வல்கோயிற்கு குழந்தை பாக்கியம் அருளப்பட; சமாரியாவும், லக்கியும் போதைப்பொருள் பழக்கத்திலிருந்து விடுபட ஜெபிப்போம்.

## ஹிமாச்சலப் பிரதேசம்

### ராம்பூர்: தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** இயேசுவின் நற்செய்தி 9 கிராமங்களில் புதிதாக அறிவிக்கப்பட்டு, அதன்மூலம் 795 பேர் இயேசுவைக்குறித்து கேள்விப்பட்டுள்ளனர். அதில் 3 பேர் கிறிஸ்துவை தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, கிறிஸ்துவின் மந்தையில் விசுவாசிகளாக இணைந்துள்ளனர். பகவதி மற்றும் அஞ்சுபாலா தேவகிருபையால் தங்களது பெலவீனங்களிலிருந்து சுகம் பெற்றுள்ளனர். 5 புதிய தொடர்பாளர்கள் சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டி வருகின்றனர். பேச முடியாமலிருந்த நமது நேப்பாளி விசுவாசி மஞ்சு ஜெபத்தின் மூலம் தற்போது மெதுவாகப் பேசும்திறனைப் பெற்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய தொடர்பாளர்கள் இரட்சிக்கப்படவும், அவர்கள் தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தங்களது ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளரவும்; சில்லாலா மற்றும் சன்மானி திருச்சபை உறவுகளில் நல்ஐக்கியம் கொள்ள; சுனிதா சபைக்குக் கிரமமாக வர; இங்குள்ள வாலிப விசுவாசிகள் பரிசுத்த வாழ்வு வாழ; நமது திருச்சபையை விட்டு பக்கத்து திருச்சபையில் இணைந்துள்ள விசுவாசிகள் நமது விசுவாசிகள் மத்தியில் எதிர்மறையான எண்ணங்களை விதைக்காமலிருக்க; நமது விசுவாசிகள் தேவனுக்கும் இயக்கத்திற்கும் உண்மையுள்ளவர்களாய் தங்களது ஆவிக்குரிய முதிர்ச்சியைப் பிரதிபலிக்க ஜெபிப்போம்.

**2 ஜூலை ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பிரபா கமலி காட்வின்
திருமதி. வசாவா ஹன்சா தாமஸ்பாய்
திருமதி. ஜரானா பரிச்சா பிபின்

## ரிகாங்பியோ:

**பப்லு பரசேத் & கல்பனா மாலிக்; சங்கர் A. & ரூத் மேரி**

**துதிக்க:** சுவிசேஷம் 695 நபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் 3 பேர் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்துள்ளனர். 10 கிராமங்களில் புதிதாக இயேசுவின் நற்செய்தியை எடுத்துச்செல்ல சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட்டுள்ளன. 5 புதிய குடும்பங்கள் ரிகாங்பியோ சபைக்கும், 2 புதிய குடும்பங்கள் மூராங் சபைக்கும் வர ஆரம்பித்துள்ளனர். விசுவாசத்தில் பின்தங்கிப்போயிருந்த பகத்சந்த் மீண்டும் மனந்திரும்பி, சபை ஆராதனையில் கலந்து கொள்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சாங்லா, மூராங் மற்றும் ரிகாங்பியோ திருச்சபைகளில் புதிதாக இணைந்துள்ள விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய பயிற்சிக்கூடுகைகள் நடத்தப்பட; இப்பணித்தளத்திலுள்ள புதிய தொடர்பாளர்கள் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; குறைந்தபட்சம் 9 பேராவது கிறிஸ்துவின் விசுவாச மந்தையில் இணைய வேண்டுமென்கிற நமது ஊழியர்களின் ஆத்தும பாரம் நிறைவேற; நமது வாலிப விசுவாசிகளுக்கு நல்ல வேலை வாய்ப்புகள் கிடைக்க; பீம், ஜகத், தன்ராஜ் ஆகியோர் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

# பஞ்சாப்

## பட்டிண்டா:

**சஞ்ஜீப் ஆனந்த் & பிரஸ்துதா**

**துதிக்க:** சுவிசேஷம் 6 கிராமங்களில் பறைசாற்றப்பட்டு, அதன்மூலம் 2020 புதியவர்கள் இயேசுவைக் குறித்து அறிந்துள்ளனர். 100 புதிய ஏற்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. 3 கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியம் மற்றும் சத்சங் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தப் பட்டுள்ளன. தீய ஆவியின் தொந்தரவினால் தற்கொலைக்கு முயன்ற லக்வீர் சிங்கும் அவரது மனைவியும் தேவ கிருபையால் மரணத்தீங்கினின்று காப்பாற்றப்பட்டுள்ளனர். மௌர் மண்டி சபைக்கென 12 பேர் அடங்கிய கமிட்டிக் குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசுத்திரைப்படம், வெளிப்புற சந்திப்பு ஊழியம் மற்றும் சத்சங் நிகழ்ச்சிகள் மூலம் 2000 பேரைச் சந்திக்க ஜெபத்துடன் திட்டமிட்டுச் செயல்படும் இச்செயல் வாய்க்க; பட்டிண்டா, தல்வான்டி சபு, கோனியானா, பூல் பகுதி ஆகிய இடங்களில் புதிய திருச்சபைகள் உருவாக்கப்பட; புச்சோ மண்டி குழு ஆண்களுக்கு அவர்களின் குடும்பப் பொருளாதார தேவைகள் சந்திக்கப்படும் பொருட்டு நல்ல வேலை வாய்ப்புகள் கிடைக்க; மனநோய்ப்பாதிப்பிலிருந்து பூஜா சுகமடையவும், அவரது பெற்றோர்கள் தங்களுடைய விசுவாசத்தில் உறுதியாக இருக்கவும் ஜெபிப்போம்.

## 3 ஜூலை திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. கருணாகரன் K.
திருமதி. பிரின்சஸ் நகோமி விக்டர்

### சங்ரூர்: கிம்பால் திலீப்பாய் & பிராரி ரீட்டாபேன்

**துதிக்க:** தேவ கிருபையால் கன்ஜிலா கிராமத்தில் சிறுவர் ஊழியம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்திருந்த ரேகா ராணி 7 வருடங்கள் கழித்து இப்போது மீண்டும் கிறிஸ்துவண்டை வந்துள்ளதோடு, 7 வருடங்களாக பிரிந்தி ருந்த தனது கணவரோடும் இணைந்துள்ளார். குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றுள்ள சுரேந்தர்பால், தேவ நாமம் மகிமைப்படும்படி சபையில் அதைக்குறித்து சாட்சி பகர்ந்து வருகிறார். ஃபூலர்கிடி கிராமத்தில் ஊழியம் செய்ய திறந்தவாசல் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கன்ஜிலா மற்றும் மொங்வால் கிராமங்களில் இரவுநேர ஆவிக்குரிய கூட்டங்கள் நடத்த ஆரம்பிக்க; இனந்தெரியாத நோயினிமித்தம் உடலில் அதிகளவு இரத்தக்குறைவினால் பாதிக்கப்பட்டிருக்கும் ரேகா விரைவில் அற்புத சுகம் பெற; விபத்தினால் ஏற்பட்ட கால்முறிவினால் பெலவீனப்பட்டிருக்கும் இளம் வாலிபர் ஹேப்பி சீக்கிரத்தில் நன்கு குணமடைய; குடிக்கு அடிமையாகி சிறுநீரகங்கள் பழுதடைந்த நிலையில் அவதிப்பட்டுவரும் அஜய் அத்தீயப்பழக்கத்திலிருந்து விடுபடவும், முழுசுகம் பெறவும்; நமது புதிய தொடர்பாளரொருவரின் குடும்பத்தில் தீய ஆவியின் அலைக்கழிப்பினால் அவதியுறும் 3 வயது சிறுவன் அற்புத விடுதலை பெற ஜெபிப்போம்.

# ஹரியானா

## ஜீவன் நகர்:

### அலியாக்கீம் ஜெனா & தீபிகா

**துதிக்க:** ராய்சீக் இனத்தார் சுவிசேஷத்தின்மீது விருப்பம் கொண்டு, ஞாயிற்றுக்கிழமைகளில் நமது ஆராதனைக்கு வர துவங்கியுள்ளனர். சர்தார் ஜக்ரூப் சிங் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டதினால், அவரைப்பார்த்து அவரது மகனும் பேரன்களும்கூட இயேசுவைப் பின்பற்ற ஆரம்பித்துள்ளனர். வெளிப்புற சந்திப்பு ஊழியம் மற்றும் சத்சங் நிகழ்ச்சிகள் மூலம் 320 பேர் புதிதாக சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். போடுலியாவாலி மற்றும் திலீப் நகர் கிராமங்களில் சிறிதளவில் 2 ஜெபஐக்கியக் கூடுகைகள் தொடங்கப்பட்டுள்ளன. விசுவாசிகள் தங்களது உறவினர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்து பகரும்வண்ணமாக அவர்கள் ஆத்துமபாரம் கொள்ள இப்பணித் தளத்தில் வைத்து 3 முறை ஆத்தும ஆதாயப் பயிற்சி நிகழ்ச்சிகள் அவர்களுக்காக நடத்த தேவன் காண்பித்துள்ள மகா பெரிய கிருபைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசுத்திரைப்படக் காட்சிகள், இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகள் மற்றும் சத்சங் நிகழ்ச்சிகள் மூலம் இயேசுவே மெய்யான தேவன் என்பதை மக்கள் கண்டுக்கொள்ள; சுவிசேஷத் திற்குச் செவிமடுக்கின்ற பால்மீகி மற்றும் ஓத் ராஜ்புட் மக்களுக்காக; துணை மைய மாகிய சாந்த் நகர் மக்களில் குடி மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி இருப்போர் அதிலிருந்து முழு விடுதலையைப் பெற; புற்றுநோய் இருப்பதாகக் கண்டறியப்பட்டு, கடந்த 3 மாதங்களாக வேதனையிலிருக்கும் ஜெத்தா ராம் தேவ கரத்திலிருந்து அதற்கான அற்புத சுகபெலனைப் பெற; விசுவாசி குர்பிரீத் சிங்கிற்கு நல்ல கிறிஸ்தவ வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

**4**
**ஜூலை**
**செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. லாட்சி டைல்ஸ் அருள்மணி
திரு. சத்ய பிரகாஷ்
திருமதி. அமோஜிதா பினித் பிரசாத்

### கலான்வாலி:
### விஜயகுமார் & ஜெபலா

**துதிக்க:** ஒரு கிராமத்திற்கு முதல்முறையாக நமது ஊழியர்கள் சென்று, அங்குள்ள 200 பேருக்கு இயேசுவைக் குறித்து அறிவித்துவிட்டு வந்துள்ளனர். 5 புதிய ஏற்பாடுகள் பகிரப்பட்டுள்ளன. 12 இடங்களில் இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகளும், 3 இடங்களில் சிறுவர் நிகழ்ச்சிகளும் சிறந்த முறையில் நடத்தப்பட்டுள்ளன. வெளிப்புற சந்திப்பு ஊழியம் மற்றும் சத்சங் நிகழ்ச்சி மூலம் கத்ரானா கிராமத்தில் 100 பேருக்கும் மேலானோர் சுவிசேஷத்தைத் தங்களது வாழ்வில் முதல்முறையாகக் கேட்டுள்ளனர். சலாம்கேரா கிராம சந்தோஷ் கௌர் ஓதான் சபை விசுவாசிகளோடுக்கூடி ஜெபித்தபோது, மூச்சுத்திணறலிலிருந்து நல்ல சுகம் பெற்றுள்ளார். இக்கிராமத்தி லுள்ள ஆலயத்திற்குள் வீரியமாக நுழைந்த போதைப்பொருளுக்கு ஆளானவர்களின் தீயக்கரங்களின் விபரீதங்களுக்கு தேவன் நமது விசுவாசிகளை விலக்கிக்காத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தனது குடும்பத்திலிருந்து எதிர்ப்பைச் சந்திக்கும் சிந்தர் தைரியமாக அதைச் சமாதானத்துடன் மேற்கொள்ள; கத்ரானா, டாடு மற்றும் திலோகிவாலா பகுதி களில் நடைபெற்றுவரும் ஆராதனைக் குழுக்கள் கிரமமாக நடத்தப்பட; பொதுக் கூட்டங்கள் நடத்த பயன்படுத்தப்படும் ஆசிர் கிராமத்தின் இருபுற நிலங்களும் தேரா பாபாவிற்கும், பஞ்சாயத்திற்கும் சொந்தமானது; ஆனால், சமீபத்தில் அந்த தேரா பாபா அப்பஞ்சாயத்து நிலத்தில் பிற மதக்கூட்டங்களை நடத்து வதற்கான வேலைகளைச் செய்து வருவதால், பிரச்சினைகளுக்கு இடமின்றி இக்காரியத்தில் தெளிவான ஞானமுள்ள தீர்வை ஆசிர் கிராமத்தலைவர் எடுக்க ஜெபிப்போம்.

### தோஷம்: ஜாண் டேவிட்சன்
### செல்வராஜ் & எஸ்தர்

**துதிக்க:** கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் ஒருவர் அடியெடுத்து வைத்துள்ளார். விசுவாசிகளுக்கான பயிற்சி முகாமில் கலந்துகொண்ட விசுவாசிகள் அங்குப் பகரப்பட்ட சத்திய வசனத்தின் மூலம் ஆவிக்குரிய பெலனடைந்துள்ளனர். டிராக்டர் வாகன விபத்திலிருந்து சவிதாவின் மகன் மூன்றுமுறை தேவ தயவால் தப்பிப்பிழைத்துள்ளார். தீராத நெடுநாள் இருமல் சளி தொல்லையிலிருந்து கிருபையாக பிரியான்சு சுகமடைந்துள்ளார். தாமன்னா, கரன்புரா, கிராவர் ஆகிய கிராமங்களிலிருந்து நமக்குப் புதிய தொடர்பாளர்கள் கிடைக்க தேவன் பாராட்டி யுள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றிருக்கும் தரம்வீர், பாபுலால், மம்தா, ஜொகிந்தர், அஜய், ஜமுனா, சாது ராம், சுக்மந்தர், சாந்தி, சுரேஷ் அமர்சிங், ஹேப்பி, பிரதீப், கமலேஷ், பல்வான் ஆகியோரின் குடும்பங்கள் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் துணிவுடன் அறிக்கை செய்ய; ஜொகிந்தர், பல்வான், பிரதீப், ராஜ்பால், பாப்பு, பான்சி ஆகியோர் குடி மற்றும் போதைப்பொருள் பழக்கங்களிலிருந்து மீள; நீரிழிவு நோய்ப்பிரச்சினையிலிருந்து மீனாக்ஷி சுகம் பெற ஜெபிப்போம்.

5
ஜூலை
புதன்

*உபவாச ஜெபநாள்*

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. புஷ்பாஞ்சலி துருபராஜ்
திருமதி. நீலா ஹஸ்தா முர்மு
திருமதி. மேடெங்கி ஸ்ரீனிவாச ராவ்
திருமதி. தேவி ராணி ஜெய்பீர் சிங்
திருமதி. சுபிலா வினு, திரு. சிவ்சங்கர்
திருமதி. கிரண் தேவி அகிலேஷ்
திருமதி. டிகுமார்தி பிரசாந்தி
திருமதி. பிரமிளா சிங் லிம்மா
செல்வி. ஹன்னா சிங்

## உத்தராகண்ட்

### நானக்மட்டா:

**சிவகுமார் & சுசிலா மராக்**

**துதிக்க:** புதிதாக சுவிசேஷம் 3 கிராமங்களில் பறைசாற்றப்பட்டதில், 120 பேர் கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். அதில் 3 பேர் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். 22 புதிய ஏற்பாடுகளும், 3 வேதாகமங்களும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. டோஹ்ராடம் கிராம அகம்ஜோத் அற்புதமாக நுரையீரல் நோய்த்தொற்றிலிருந்து முழு சுகமடைந்துள்ளார். ராஜிந்தர் கௌர் தனது பள்ளியில் 12-ம் வகுப்பிற்கான தேர்வில் முதல் மதிப்பெண்கள் எடுத்து தேர்ச்சியடைந்துள்ளார். டோஹ்ராடம் கிராம புரான்சிங் தவறான குற்றவழக்கிலிருந்து விடுபட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து தர்ஷன் சிங், ஜித்தன் கௌர், கேவல் சிங் மற்றும் அர்ச்சனா விடுதலை பெற; மகேந்திர சிங் மற்றும் மன்ஜீத் கௌர் இயேசுவை ஏற்றுக்கொள்ள; கடும் காய்ச்சல் மற்றும் இரத்தக்கிருமி பிரச்சினையினால் அல்லலுறும் சதிமடார் சிங் விரைவில் நன்கு குணமடைய; நவ்சன் கிராம ஆல்வினுக்கு நல்ல வேலையொன்று கிடைக்க ஜெபிப்போம்.

### தினேஷ்பூர்:

**ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்**

**துதிக்க:** சுவிசேஷத்தினால் ஒரு கிராமம் சந்திக்கப்பட்டு, அங்கிருந்த 30 பேர் முதல்முறையாக இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். 10 புதிய ஏற்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. 5 சத்சங் கூடுகைகள், 2 இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகள் முறையே நடத்தப்பட்டுள்ளன. எவ்வித மருத்துவ உதவியுமின்றி ஜெபத்தின் மூலம் கிருஷ்ணா ஜொகிந்தரின் கர்ப்பப்பையிலிருந்த 3 கட்டிகளும் அதிசயமாக மறைந்துபோய் உள்ளன. கொடிய விபத்தின் ஆபத்திலிருந்து தரம்பால் மற்றும் ஜாங்கீர் கௌர் காப்பாற்றப்பட்டுள்ளனர். ஜெப உதவி மூலம் சந்தீப் கௌர் மனஉளைச்சலிலிருந்து விடுதலை பெற்றுள்ளார். சக்தேவ்சிங் ஜெபத்தின் மூலம் நல்லதொரு வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அலக்தாவி கிராம ராஜ்ராணி நெடுநாட்களாக இருக்கும் இருமல் சளி தொல்லையிலிருந்து அற்புத சுகமடைய; தங்களது மகளினால் இழந்த குடும்ப சமாதானத்தை மீண்டும் அசோக் & சங்கீதாவின் குடும்பம் பெற; ஹர்தீப் குடிப்பழக்கத்திலிருந்து விடுபடவும், தனது மனைவியைத் துன்புறுத்தாமலிருக்கவும்; சரீரக்கட்டிப் பிரச்சினையிலிருந்து 3 மாத பச்சிளங்குழந்தை பிரின்ஸியும், எலும்பு நோய்த்தொற்றிலிருந்து சரிதாவின் மகனும் பூரண சுகம் பெற ஜெபிப்போம்.

**6 ஜூலை வியாழன்**

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. மேபல் ஃப்ளாரன்ஸ் சாமுவேல்
திருமதி. டேக்காம் சங்கீதா சுனில் குமார்
திருமதி. டேக்காம் சுனிதா ஸ்ரீனிவாசா
திருமதி. சலோமி ஹன்ஸ்தா

# ராஜஸ்தான்

## ஹனுமான்கட்:

### முதவத்து ராஜூ நாயக் & புக்கியா ஜான்சிபாய்

**துதிக்க:** சுவிசேஷ கூட்டங்கள் மற்றும் இரவுநேர ஜெபக்கூட்டங்கள் மூலம் 18 கிராமங்களிலுள்ள 385 பேர் இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். ஒருவர் கிறிஸ்துவின் மந்தையில் புதிதாக இணைந்துள்ளார். இயேசுவின் நாமத்தில் ஊழியர்கள் கூடி ஜெபித்தபோது, தீய ஆவியின் பிடியில் சிக்கியிருந்த சோனுசிங் அப்பிடியிலிருந்து அற்புத விடுதலை பெற்றுள்ளார். புதுமணத் தம்பதிகளான நான்சி & முகேஷ் கிறிஸ்துவை தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தைக் கேட்டிருப்போர் அதற்குச் செவிசாய்க்க தூயாவியானவரின் ஒத்தாசை அவர்களுக்குக் கிடைக்க; நமது விசுவாசி கீதாவிற்கு சுகப்பிரசவம் நேரிட; சுமித்ராவும், முனிந்தரும் தங்களுக்கு எதிராக வரும் பிரச்சினைகளைக் குடும்பமாக மேற்கொள்ள; நமது சுதேச ஊழியர் தர்ஷனும், அவரது குடும்பத்தினரும் கர்த்தருடைய பணியில் உண்மையாய் ஊழியம் செய்ய ஜெபிப்போம்.

## அஜீத்கார்:

### ஜெய்பீர் சிங் & தேவி ராணி

**துதிக்க:** சுவிசேஷம் 2 கிராமங்களுக்குச் சென்றடைந்திருப்பதை முன்னிட்டு, அங்கே 370 பேர் கிறிஸ்துவைக் குறித்து அறியும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். 300 புதிய ஏற்பாடுகளும், ஒரு வேதாகமமும் மக்களிடையே கொடுக்கப்பட்டுள்ளன. மீனா மற்றும் துர்காவின் குடும்பத்தார் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். சாந்தா சுவிசேஷத்தை தைரியமாகப் பிறரிடம் பகர்ந்து கொள்வதோடு, தேவசெய்தியைப் பிரசங்கமாகவும் செய்து வருகிறார். சரோஜாவிற்கு அற்புதமாக நேரிட்ட சுகப்பிரசவத்தைப் பார்த்து, அவருடைய கணவரும் கிறிஸ்துவை விசுவாசிக்க துவங்கியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முதல்முறையாக சுவிசேஷத்தைக் கேட்டிருப்போர் இயேசுவை தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; குடிப்பழக்கத்திலிருந்து ஜித்தேந்தர் விடுதலை பெற; தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து ராஜ்குமாரின் குடும்பம் விடுவிக்கப்படவும், அவர்களது குடும்பத்தில் தெய்வீக சமாதானம் ஆளவும் ஜெபிப்போம்.

## *பயம் பறந்தோடியது!*

*பஞ்சாப், புத்லாடா பணித்தளத்தைச் சார்ந்த ககன், தான் 5 நாட்களுக்குள் மரித்துப்போவதாக மந்திரவாதியொருவன் கூறியதை மனதில் கொண்டு மிகவும் பயந்துகொண்டிருந்தார். பின் தனது மாமாவின் இறப்பைக் கண்டு தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் முயற்சியாக சுமார் 1 லட்சம் செலவழித்தார். பின்பு நமது ஊழியர்களை நாடி அவர் ஜெபிக்க வந்த போது, அவரது பயஉணர்வு முற்றிலும் நீங்கியது. இப்போது அவர் தனது மனைவியுடன் கிறிஸ்துவில் தனது விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாக இருக்கின்றார். அல்லேலூயா!*

## 7 ஜூலை வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜேன் அமுதா இறைபிச்சை
திரு. சித்தரஞ்சன் டாண்டி, திரு. தீப்ரத்னா
திருமதி. தீபிகா ராணி பானி

### சாம்ரானியா: மீனுகா அடப்பா மேத்யூ & ராம்புரம் பெடாக்கா ஆஷா

**துதிக்க:** ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டு, அதன்மூலம் இயேசுவின் அன்பு 80 பேருக்கு எடுத்துரைக்கப் பட்டுள்ளது. 20 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் மக்கள் மத்தியில் தரப்பட்டுள்ளன. 6 இடங்களில் வேதாகம வகுப்புகளும், 4 இடங்களில் சுவிசேஷக் கூடுகைகளும் ஆசீர்வாதமான விதங்களில் நடந்து முடிந்துள்ளன. பணித்தள அளவில் நடத்தப்பட்ட குடும்பக்கூடுகைகள் மற்றும் வாலிபர் கூடுகைகள் மக்களுக்கு சிறந்த முறையில் ஆவிக்குரிய பலனளித்துள்ளது. சுனில் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதால், அவருடைய முழுக்குடும்பமும் ஞாயிறு ஆராதனையில் பங்கேற்க ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பல்வேறு இடங்களுக்குப் புலம்பெயர்ந்துச் சென்றுள்ள நமது விசுவாசிகள் நாளுக்குநாள் கிறிஸ்துவில் பலங்கொண்டு வளர; ராஜ்கெதா மற்றும் சீக்காரி கிராமங்களில் கைக் குழாய்கள் பொருத்தப்பட; மனநோய்ப் பிரச்சினையிலிருந்து நான்சிங்கின் மனைவி அற்புத சுகமடைய; ஸ்வாதர் மற்றும் கிரிஷாங்கன் கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; கஸ்ருபீல், ரம்சிங் பிலாலா மற்றும் ரதி பரிலா சபை மூப்பர்கள் தங்களது திருச்சபை மக்களை தேவ வழிகாட்டுதலின்படி சரியாக நடத்திச் செல்ல ஜெபிப்போம்.

## உத்தரப் பிரதேசம்

### கோண்டா சிறுவர் விடுதி: ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா

**துதிக்க:** தனித்தாள் ஊழியம் மூலம் நமது விசுவாசிகள் தங்களது உறவினர்களிடையே சுவிசேஷத்தை அறிவிப்பதினால், பற்பல கிராமங்களிலிருந்து புதிய மக்கள் கூட்டங்கூட்டமாக கிறிஸ்துவண்டை வருகின்றனர். பிள்ளைகளின் சிறந்த எதிர்கால வாழ்வின் மேம்பாட்டை முன்னிட்டு இங்குள்ள ரெயில்வே சாரணர் குழு நமது விடுதிப்பிள்ளைகளுக்கும் சாரணர் பயிற்சியை அளிப்பதற்குத் திட்டமிட்டு வருகின்றனர். இம்மட்டும் விடுதியில் இருப்போரின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பை தேவன் சிறப்பாகக் கண்காணித்து வருகிற கிருபைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோடை விடுமுறை நாட்களில் சபைச்செயல்பாடுகளில் பங்கெடுத்த நமது விடுதிப்பிள்ளைகள் யாவரும் தாங்கள் கேட்டிருக்கும் சத்தியத்தின்படி நடக்க; நமது ஊழியர்கள் பணி செய்யும் சில கிராமங்களில் ஓரிரு குடும்பங்களே கிறிஸ்தவக் குடும்பங்களாய் இருப்பதினால், அக்குடும்பங்கள் அவரவர்களுடைய கிராமங்களில் கிறிஸ்துவுக்காக ஜீவனுள்ள சாட்சிகளாய் வாழ்ந்து கனி தர; நமது விடுதிப்பிள்ளைகளின் பெற்றோர்களும் வேத வாசிப்பு, ஜெபம் ஆகியவற்றில் வளர; லக்னோ உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் நமது கோண்டா நில வழக்கு சுமூகமாக முடியவும், அதில் நமக்காக வாதாடும் வழக்கறிஞர் திரு. நாக் அவருக்கு தேவன் விசேஷித்த ஞானம் தரவும் ஜெபிப்போம்.

8 ஜூலை சனி

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பிரைட் ஜெயக்குமார் C.
திரு. பிதுஷ் குமார் நாயக்
திருமதி. பிரபாஷினி பவன் குமார்

## ஜின்ஜக்:

### சமரேந்திர சிங் & சுஸ்மித்தா

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதை முன்னிட்டு, 180 பேர் இயேசுவைக் குறித்து அறிந்துள்ளனர். அதில் 4 பேர் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் மந்தையில் அடியெடுத்து வைத்துள்ளனர். சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கும் மக்கள் மத்தியில் 100 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. கபாசி கிராமத்திலிருந்து 4 பேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, கிறிஸ்துவின் விசுவாச மந்தையில் இணைந்துள்ளனர். ஜின்ஜக், ரசுலாபாத், ரூரா திருச்சபைகளில் 8 பேர் புதிதாக ஆலயம் வரத் தொடங்கியுள்ளனர். கபாசி கிராமத்தில் வைத்து நடைபெற்ற தேடுவோர் முகாமில் 12 பேர் கலந்துகொண்டு, தேவாசீர்வாதம் பெற்றிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விடுமுறை வேதாகமப்பள்ளி வகுப்புகளில் பங்கேற்ற சிறுபிள்ளைகளும், அவ்வூழியத்திற்கென பயிற்சிப்பெற்ற 90 ஆசிரியர்களும் கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தில் நன்கு வளரவும், கிறிஸ்துவின் சாட்சிகளாய் தொடர்ந்து ஊழியப்பணிகளில் ஈடுபடவும்; நிதின் குமார் ரானு, நாதுராம், பிஜய் குமார், அஞ்சலி, அபிஷேக் ஆகிய நமது விசுவாசிகள் தங்களின் பலவித சரீரப் பெலவீனங்களிலிருந்து பூரண சுகமடைய; நமது வெளிப்புற சந்திப்பு ஊழியக்குழுவினர் ஒருமனதுடன்கூடிய ஒற்றுமையுடன் செயல்பட ஜெபிப்போம்.

## கைம்கஞ்ச்:

### எபநேசர் G. சாம் & ஜெபராணி

**துதிக்க:** கம்பிள், இஜோரி, ஐயாபூர், லால்பூர் மற்றும் பாத்புரா கிராமங்களில் விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியம் மிக ஆசீர்வாதமாக நடந்து முடிந்துள்ளது. அப்பிள்ளைகளுக்குப் பரிமாறப்பட்ட திண்பண்டங்களுக்கான செலவுகளை அந்தந்த சபை மக்களே தங்களின் காணிக்கைகள் மூலம் பொறுப்பெடுத்துக் கொண்டனர். இட்டா என்றொரு புதிய தொடர்பாளர் நமது ஊழியத்தில் கிடைத்துள்ளார். இளவயது விசுவாசிகளான சுக்தேவி மற்றும் ராஜ்வீர் நமது ஊழியத்திற்கு நல்லாதரவு காட்டி வருகின்றனர். சரீரக்கட்டி உபாதைகளிலிருந்து பிரான்சி பூரண சுகமடைந்து, தேவனுக்குச் சாட்சியாய் வாழ்ந்து வருகிறார். கம்பிள் மற்றும் இஜோரி கிராமங்களில் விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியத்தின் மூலம் சிறுவர் ஞாயிறுப்பள்ளி வகுப்புகள் பலப்பட்டு, நல்ஆவிக்குரிய எழுச்சி பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அனுஜ் மற்றும் மானிக்சந்திற்கு தகுந்த வேலைகள் கிடைக்கவும், அவர்கள் மீதிருக்கும் மாந்திரீகக் கட்டுகள் இயேசுவின் நாமத்தில் முறிந்து நிர்மூலமாகவும்; கம்பிள் கிராம ராகிதேவி, பூனம், வந்தனா, கோமதி, சுனிதா, ரோஷிணி, சாந்தினி ஆகியோர் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் தைரியமாக அறிக்கையிட; உள்ளூர் பெண் பிள்ளைகள் கிறிஸ்துவை விசுவாசிக்கின்றபோதிலும், அவர்களது கிராமப்பாரம்பரியங்களை விட்டுவிட்டு, கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட அவர்களுக்கிருக்கும் சமுதாய பயங்கள் யாவும் மறைய; நமது விசுவாசி சாந்தன் தனக்கு விரோதமாயிருக்கும் மாந்திரீகச் செயலை மேற்கொண்டு, தனது சிறிதளவு வியாபாரத்தில் நல்வளர்ச்சி காண; இப்பணித்தளத்தில் புதியதொரு ஆலயம் கட்ட தகுந்த நிலமொன்று கிடைக்க ஜெபிப்போம்.

9
ஜூலை
ஞாயிறு

# மத்தியப் பிரதேசம்

**சிரியா: மகேந்திரன் & புஷ்பம்**

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அதன் விளைவாக 463 பேர் இயேசுவைக் குறித்து அறிந்து கொண்டுள்ளனர். 2 புதியவர்கள் கிறிஸ்துவை தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். செம்மல்கோட் ஆலயத்தில் வைத்து நடந்த உபவாச ஜெபக்கூடுகையில் 38 விசுவாசிகள் பங்கேற்று பயனடைந்துள்ளனர். காரி மற்றும் பஜார் கோடா ஆலயங்கள் சார்பாக நடைபெற்ற 2 நாட்கள் விசுவாசிகள் முகாமில் 120 பேர் கலந்துகொண்டு, அங்கு அருளப்பட்ட தேவ வார்த்தை மூலம் ஆவிக்குரிய ஆசீர்வாதம் பெற்றுள்ளனர். ஓர்ஜு விஷப்பாம்பு கடித்த ஆபத்திலிருந்தும், மகேஷ் வாகன விபத்திலிருந்தும் தேவகரத்தால் காப்பாற்றப்பட்டுள்ளனர். தன்னார்வ ஊழியர்களாக இருந்த 3 பேர் இப்போது முழுநேர சுதேச ஊழியர்களாக மாறியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீய ஆவிகளின் பிடிகளி லிருந்து கைலாஷ், சோனு, பாலி மற்றும் ஷீலா மீட்கப்பட; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள டிட்டு மீண்டும் மனந்திரும்பி, கிறிஸ்துவின் பக்கம் வர; தனது வாழ்வை முழுநேர ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்து, அதற்கென ஆயத்தப் பட்டுவரும் 21 வயது நிரம்பிய சய்துலின் வாழ்வில் தேவ சித்தத்தின்படி தேவ திட்டம் நிறைவேற ஜெபிப்போம்.

**குணா: சத்தீஷ் & ஷர்மிளா**

**துதிக்க:** தேவ வசனம் 2 கிராமங்களில் புதிதாக பறைசாற்றப்பட்டதின் நிமித்தம், 1000 பேர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். அதில் 12 பேர் புதிய விசுவாசிகளாக கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். பெண்கள் கூடுகையொன்றும், 9 இடங்களில் சிறுவர் நிகழ்ச்சிகளும் முறையே நடைபெற்றுள்ளன. பிப்பள்கெடி, நாகேரா, காதி, அம்ராய் ஆகிய கிராமங்களில் புதிதாக வேதாகம வகுப்புகள் துவங்கப்பட்டுள்ளன. மோகன்பூர் பகுதி ரஹாபாய் தொடர்ச்சியாகச் செய்த ஜெபத்தின் விளைவாக தனது கண்பார்வையை மீண்டும் பெற்றுள்ளார். கடும் ஜுரத்தி லிருந்து நீராபாய் சுகமடைந்துள்ளார். குடிப்பழக்கத்திலிருந்து நீர்சிங் விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாச வாழ்வில் பின்வாங்கிப்போயிருக்கின்ற விசுவாசிகள் மீண்டும் கிறிஸ்துவின் பக்கம் வர; ராகேஷும், சிவராஜும் காசநோயிலிருந்து சுகம் பெற; பியர்சிங் ஊழியத்தில் இடையூறு விளைவிக் காமல் இருக்க; சந்திராபேன், வன்சிங் மற்றும் விஷால் குடிப்பழக்கத்தி லிருந்து விடுபட; புதிதாகப் பிறந்த பச்சிளங்குழந்தையை இழந்துதவிக்கும் ஜடியாவின் குடும்பத்தில் தேவ சமாதானம் நிலவி, அவர்கள் விரைவில் நல்ல மன ஆறுதலைப் பெற ஜெபிப்போம்.

**10**
**ஜூலை**
**திங்கள்**

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. தேவிகா கிருபா குல்லு
திருமதி. பினிட்டா டொப்போ பவுலஸ்
திரு. மல்லா வித்யசாகர்
திரு. ஜக்மோகன் சிங்

## பன்சேமால்:

### சஞ்ஜீப் குமார் ஆன்ட்ரப் & ஸ்வர்ணலதா

**துதிக்க:** கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தைப் புதிதாக 11 பேர் அறிக்கை செய்துள்ளனர். படுக்கையிலிருந்து கீழே விழுந்து 1/2 மணிநேரம் சுயநினைவற்ற நிலையிலிருந்த 2 வயது சிறுமி, அவளது பெற்றோர்களின் உருக்கமான ஜெபத்தினால் அற்புதமாக மீண்டும் சுயநினைவைப் பெற்றுள்ளாள். ராகேஷ் மற்றும் லிம்பாபாய் தேவ வார்த்தையைக் கேட்க மிகவும் வாஞ்சை காட்டுகின்றனர். 2 வருடங்களாக மனநிலை பாதிக்கப்பட்டுச் சுகவீனமாயிருந்த 18 வயது வாலிபனொருவன் ஜெபத்தினால் பூரண சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 2030-ம் ஆண்டிற்கான ஊழிய தரிசனம் நிறைவேறும்படி ஊக்கமாகச் செயல்பட நமது ஊழியர்களுக்கு தேவையான ஞானமும் பெலனும் பரத்திலிருந்து கிடைக்க; வரும்நாட்களில் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் ஊழிய நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பாய் நடந்தேற; இப்பணித்தளத்திற்கு இன்னும் தேவையான ஊழியர்கள் கிடைக்க; நமது ஊழியத்தை எதிர்க்கும் நானாஜி தேவனின் அன்பை ருசிக்க; நமது ஊழியர்கள் அனைவரின் பாதுகாப்பிற்காகவும், சுகத்திற்காகவும் ஜெபிப்போம்.

## நிவாலி:

### சன்னமல்லப்பா & ரூபா ஏலவாகி

**துதிக்க:** சுவிசேஷம் 5 கிராமங்களில் பறைசாற்றப்பட்டுள்ளதின் மூலம் 315 பேர் சுவிசேஷத்தை முதல்முறையாகக் கேட்கும் பாக்கியமடைந்துள்ளனர். பெடதா, தின்சாகௌன், ஹிர்க்ரதி, வர்லியாபானி, தங்கதா மற்றும் மோகு கிராமங்களில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் யாவும் ஆசீர்வாதமாக நடந்து முடிந்துள்ளன. வஸாரில் 3 குடும்பங்கள், கோல்யாபானியில் 4 குடும்பங்கள், குன்ஜாரியில் 2 குடும்பங்கள் மற்றும் பிசோடியில் 2 குடும்பங்கள் நமது வாராந்திர சபை ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். பொரிலியில் 109 பேரும், நியூ சகல்கத்தில் 23 பேரும், பட்டல்யா பால்யாவில் 39 பேரும், சர்புன்ச் பால் யாவில் 44 பேரும், வர்லியாபானியில் 26 பேரும் இயேசுத்திரைப்படத்தின் மூலம் இயேசுவைக் குறித்து அறிந்துள்ளனர். நமது விசுவாசிகளின் ஒத்தாசையோடு 4 இடங்களில்பஜன் கூடுகைகள் மிகச் சிறப்பாக நடந்து முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நகதிராணி, பல்ஸ்முத், கம்பானி மற்றும் வஸார் கிராமங்களிலுள்ள புதியவர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிடுவதற்காக நடத்தவிருக்கும் நிகழ்ச்சிகள் எவ்வித தடையுமின்றி சிறந்த முறையில் நடந்து முடிய; இப்பணித்தள ஊழிய வளர்ச்சிக்கு அர்ப்பணமுள்ள நல்லதொரு சுதேச ஊழியர் கிடைக்க; தீய ஆவியின் தொந்தரவினால் கால்களில் மாறிமாறி வரும் வலியினால் அல்லல்படும் ரெஞ்சுபாய் அற்புத சுகவிடுதலை பெற ஜெபிப்போம்.

**11**
**ஜூலை**
**செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பால் சம்பத் T.

## பீஹார்

### முரளிகன்ஜ்:

**செலினா ஜாய்ஸ் & ஜாண் M.**

**துதிக்க:** தம்சய்னா, பகவான்பூர், பெஜ்னாத்பூர், மகிஷி, கோவிந்தபூர் ஆகிய கிராமங்களில் ஊழியப் பின்தொடர்பணிகள் நடைபெற்றுள்ளன. 2 கிராமங்களில் நேர்த்தியாக ஞாயிறு ஆராதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2 கிராமங்களில் நடைபெறும் வேதாகம வகுப்புகளில் கலந்துகொள்வோர் தங்கள் வாழ்வில் வேத வசனத்தின்படி நற்சாட்சிகளாக விளங்கி வருகின்றனர். பெஜ்னாத்பூரில் வைத்து திரையிடப்பட்ட இயேசுத்திரைப்படத்தை 60 பேர் கண்டு பயனடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிஸ்னுதேவ் யாதவ் மற்றும் நாகு யாதவ் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; சுவிசேஷத்தைக் கேட்டிருக்கும் உபேந்திரா தூயாவியானவரால் வழிநடத்தப்பட்டு, தேவ வார்த்தையை விசுவாசிக்கத் தொடங்க ஜெபிப்போம்.

### சாட்டாபூர்: பவார் தினேஷ்பாய் & பாருட் சீலாபாய்

**துதிக்க:** புதியதொரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. 100 பேர் சத்திய சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். ஒரு புதிய ஏற்பாடு கொடுக்கப்பட்டுள்ளது. ஜெபத்துடன் எடுத்த சிகிச்சையினால் சிறுநீரக நோய்த்தொற்றிலிருந்து மாலாதேவி நன்கு சுகமடைந்துள்ளார். தமுவா, சில்லக்ரா மற்றும் லால்பூர் கிராம விசுவாசிகள் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கை செய்ய ஆயத்தமாக உள்ளனர். தொழிலினிமித்தம் இடம்பெயர்ந்துச் சென்றிருக்கும் நமது விசுவாசிகள் யாவரும் கர்த்தருக்குள் சந்தோஷமாய் இருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோவிந்த்பூர், சில்லக்ரா, பகவன்பூர், தாராரஹா மற்றும் ராஜ்பூர் கிராம புதிய தொடர்பாளர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; சுலேன் சதாவிற்கு மழலை பாக்கியம் கிடைக்க; நேகா குமாரி பக்கவாத நோயிலிருந்தும், விஷ்ணு சதா முதுகுத்தண்டுவட பிரச்சினையிலிருந்தும் சுகமடைய; ஊழிய ஆய்வு செய்ய முற்படும் 2 புதிய இடங்களில் சுவிசேஷம் அறிவிக்கும் வாய்ப்புகள் கிடைக்க ஜெபிப்போம்.

### கிழக்கு கங்கை பிராந்தியம்:

**பாபு புஷ்பராஜ் & ரேச்சல் ஜாய்ஸ்**

**துதிக்க:** பெஜ்னாத்பூரில் இயேசுத்திரைப் படத்தை 60 பேருக்கும் மேலானோர் கண்டு பயனடைந்துள்ளனர். பிரமோத் சர்தார் தனது வியாபார நோக்கத்திற்காக ஒரு வாகனம் வாங்கும் சிலாக்கியம் பெற்றுள்ளார். ரேது குமாரிக்கு ஜெபத்தின் மூலம் நல்லதொரு வாழ்க்கைத்துணை அமைந்துள்ளது. இந்த கடும் வெப்பக்காலத்தில் நமது மிஷனரிகளுக்கும், விசுவாசிகளுக்கும் தேவன் பாராட்டுகின்ற கிருபைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தவறான குற்றச்சாட்டினால் 20 வருடம் சிறைவாசம் அநுபவித்து விடுதலை பெற்றுள்ள பிஸ்னு சதாவிற்கு கண்டறியப்பட்டிருக்கும் காசநோயிலிருந்து பூரண சுகம் கிடைக்க; குடிப்பழக்கத்திலிருந்து ரேகா தேவியும் அவரது கணவரும் விடுவிக்கப்பட; திருநங்கையாக மாறும் நிலையிலிருக்கும் தில் சாந்த் குமாருக்காக ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜெசையா ஹாரிஸ்
திரு. குப்புசுவாமி P.
திரு. பிட்யூத் குமார் சிங்

## ஜார்க்கண்ட்

### லிட்டிபாடா: எபினேசர் சாமுவேல் & மேபல் ஃபிளாரன்ஸ்

**துதிக்க:** இயேசுவின் நற்செய்தி 3 கிராமங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் 50 பேர் சுவிசேஷத்தைக் கேட்டிருக்கின்றனர். அதில் 4 பேர் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் தூய மந்தையில் இணைந்துள்ளனர். பற்பல கிராமங்களில் 3 இடங்களில் இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகள் நடத்தப்பட்டுள்ளன. பணித்தள அளவில் நடத்தப்பட்ட வாலிபர் கூடுகையில் 45 பேர் கலந்து கொண்டு ஆவிக்குரிய பயனடைந்துள்ளனர். கர்பஹாடி கிராம லக்கி சுவிசேஷத்தைக் கேட்டு, தேவ அன்பை ருசித்தப்பின் இரத்தப்போக்கு பிரச்சினையிலிருந்து சற்று சுகமாகி வருகிறார். ராம்பூர் கிராம விசுவாசி பாம்புக்கடியினால் ஏற்பட்ட தீங்கின் ஆபத்தான விளைவிலிருந்து அற்புதமாகக் காப்பாற்றப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கர்பஹாடி கிராம சுரேஷ் காசநோயிலிருந்தும், லக்கி பெண்ணியப் பிரச்சினையிலிருந்தும் பூரண குணமடைய; நெடுநாட்களாக இருக்கும் வாந்தி தொல்லையிலிருந்து லிட்டிபாடா கிராம தீமோத்தேயு மற்றும் குடலிறக்கப் பிரச்சினை அத்துடன் விரைப்பை வீக்கப் பிரச்சினையிலிருந்து ஹத்பண்டா கிராம தீமோத்தேயு அற்புத சுகம் பெற; நமது சிறுவர் பராமரிப்பு மையக் குழந்தைகள் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளர; சிறுநீரகக் கோளாறை முன்னிட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நமது சுதேச ஊழியரின் மனைவி சீலா ஹஸ்தக்கிற்கு கிருபையாய் அற்புத சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

### அமலகாச்சி:

**கஜன் சம்பிரமரி & ரோஷிலா**

**துதிக்க:** சபை மூப்பர்களுக்கான பயிற்சிக் கூடுகை நடத்தப்பட்டு, அதில் 20 பேர் கலந்துகொண்டு ஆவிக்குரிய ஆசீர்வாதமடைந்துள்ளனர். கோடை விடுமுறை நாட்களில் வேதவசனங்களை மனனம் செய்யக் கொடுக்கப்பட்ட பணியில் இப்பணித்தள பிள்ளைகள் ஒவ்வொருவரும் அவ்வேத வசனங்களை மிகுந்த அக்கறையுடன் கற்றுத்தேர்ந்துள்ளனர்; அதிலும் சிலர் ஏறத்தாழ 119-ம் சங்கீதத்தி லுள்ள 100 வசனங்களை மனனம் செய்ய தேவன் விசேஷித்த ஞானம் தந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழிய விரிவாக்கத்தை முன்னிட்டு திட்டமிட்டுள்ளபடி மேற்கு வங்காளம் மாநில எல்லைப் பகுதிகளில் அமைந்திருக்கும் ஒரு சில கிராமங்களில் ஆய்வுப்பணியை மேற்கொள்ள தேவ ஒத்தாசை கிடைக்க; நமது மால்தோ விசுவாசிகள் நற்சாட்சியுள்ள வாழ்வு வாழவும், அதன் பொருட்டு மால்தோ இனமல்லாத பிற மக்களும் தடையேதுமின்றி இயேசுவை தங்களது சொந்த இரட்சகராக ஏற்கவும்; நமது சுதேச ஊழியரின் மகன் ராஜு வலிப்புநோயிலிருந்து பூரண சுகமடைய; கொட்டா கெப்பு, பொகோரா, காலுபாரா மற்றும் தல்மி கொட்டா கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட ஜெபிப்போம்.

## 13 ஜூலை வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பெனில்டா தயாசிங்

### அமரபாடா:
### வியாசு பாபு & சௌந்தர்ய ரேகா

**துதிக்க:** புதிதாக 18 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதை முன்னிட்டு, 7381 பேர் இயேசுவைக் குறித்து கேள்விப்படும் சிலாக்கியத்தைப் பெற்றுள்ளனர். அதில் 25 பேர் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். நமது அமரபாடா பயிற்சி மையம் புதிய விசுவாசிகள் மற்றும் சபை மூப்பர்களைப் பயிற்றுவிப்பதற்காக நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 35 கிராமங்களில் இயேசுத் திரைப்படம் திரையிடப்பட்டபோது, அங்குள்ள ஏராளமான மக்கள் அதை ஆவலுடன் கண்டுகளித்திருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிசாசு பிடிகளிலிருந்து தனிஷ் டுடு, சந்தீப் சோரேன், சுதீர் பெஸ்ரா, மோதிலால் மராண்டி, சுரின்சோனா டுடு ஆகியோர் விடுவிக்கப்பட; சார்மிளாவும் கபர்முகியும் இரத்தப்போக்கு பிரச்சினைகளிலிருந்தும், மங்கல் காசநோயிலிருந்தும், சந்தோஷ் வலிப்பு நோயிலிருந்தும் முழு சுகமடைய; குடிசோபூர் மற்றும் பாபுபூர் கிராமங்களில் புதிய திருச்சபைகள் உருவாக்கப்பட ஜெபிப்போம்.

### தல்பும்கட் விடுதி:
### வகேரா பிரமோத் குமார் & ஜஷோதாபேன்

**துதிக்க:** சுவிசேஷ வசனம் புதிதாக 13 கிராமங்களில் எடுத்துரைக்கப்பட்டதின் விளைவாக 1500 பேர் கிறிஸ்துவைக் குறித்து அறிந்துள்ளனர். தனக்கு புற்றுநோய்க்கட்டி இருப்பதாகப் பயந்துகொண்டிருந்த குனாராமிற்கு அது சாதாரண கட்டி தான் என்று அறிவிக்கப்பட்டு, அறுவை சிகிச்சை மூலம் அக்கட்டி அகற்றப்பட்டுள்ளது. முர்காதி மற்றும் லோபோ கச்சா கிராமங்களில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியங்களில் அங்குள்ள அனைத்து சிறுபிள்ளைகளும் விருப்பத்துடன் பங்கேற்றுள்ளனர். வானிலை மாற்றங்களினால் ஏற்படும் உடல்நலக் கேடுகளிலிருந்து நமது விசுவாசிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபைச் செயல்பாடுகள் மற்றும் வெளி ஊழியப்பணிகளில் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேலைகளிலும், பொறுப்புகளிலும் சபை மூப்பர்கள் உண்மையுள்ளவர்களாய்க் காணப்பட; இப்பணித்தள ஊழியத்தைப் பகிர்ந்து செய்ய சரியான சுதேச ஊழியர் குடும்பமொன்று கிடைக்க; லர்கபாசா மற்றும் பன்கிசோல் கிராமங்களில் சிறிய ஆலயங்கள் கட்டப்பட; நமது புதிய தொடர்பாளர்களான லுபின்மர்தி, சவான் சோரேன், ரகு சோரேன், துமா பெஸ்ரா, துலா சோரேன், ஃபட்டு ஹன்ஸ்தா, ராமு ஆகியோர் கிறிஸ்துவை தங்களது சொந்த இரட்சகராக ஏற்க; கல்பேஷ் ராவுத்தின் குடும்பம் குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

14
ஜூலை
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பென்ஹர் Y.
திருமதி. ஜிக்கி எட்வர்ட்

## கோபிகந்தர்:

**ஜாண் தினேஷ் & பின்னி ஞானம்**

**துதிக்க:** அமர்பானி, பிப்ரா மற்றும் கொர்சிரா கிராமங்களிலிருந்து புதியவர்கள் 24 பேர் கிறிஸ்துவின் மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். பயங்கர தீ விபத்தில் படுகாயமடைந்திருந்த பூல்முனி ஜெபத்தின் மூலம் முழுவதுமாக சுகமடைந்துள்ளார். இயேசுத்திரைப்பட ஊழியம் மூலம் டூல் தெகிரி கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். டங்கர்காவ் ஆலயக்கட்டுமானப்பணி சுமூகமாக நடைபெற்று வருகிறது. தன்னார்வ ஊழியரான கிருஷ்ணன் ஊழியச்செயல்பாடுகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகிறார், சபை மூப்பர்களின் பயிற்சி நிகழ்ச்சிகள் திருச்சபைகளை வலுப் படுத்தவும், விசுவாசத்தில் பின்மாற்றமடைந் துள்ளோரை மீண்டும் கிறிஸ்துவண்டை கொண்டு வருவதற்கும் மிகுந்த ஆசீர்வாத மாக அமைந்துள்ளன. ஜாதர்பானி, கொருமு மற்றும் குந்தா பஹாடி கிராமங்களில் பகர்ந்து கொள்ளப்பட்ட சுவிசேஷ செய்தியை 34 பேர் கேட்டுப் பயனடைந்துள்ளனர். கமலகோசா கிராமத்தில் சிறிய ஜெபக்குழுவொன்று தொடங்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக இரட்சிப்பைப் பெற்றுள்ள விசுவாசிகள் கிறிஸ்துவில் திடமாக வளர; அடிக்கடி வலி ஏற்பட்டு, குறைமாத ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்து இழக்கக்கொடுத்துவரும் டூல் தெகிரியின் குடுமபத்தில் காணப்படும் இத்தகைய இக்கட்டான நிலை மாறவும், அவருக்குப் பூரண புத்திர பாக்கியம் கிடைக்கவும்; கிறிஸ்தவ விசுவாசக் கொள்கையைக் கடுமையாக எதிர்ப்போர் நல்ல மனமாற்றம் பெற்று, கிறிஸ்துவின் அன்பை ருசிக்க; கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பி, தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட ஆயத்தமாகி வரும் அர்ஜுன் கிரிகி மற்றும் ஜித்தேந்தர் கிரிகிக்காக ஜெபிப்போம்.

## *கோவேறு கழுதைகளும், ஆப்பிள் பழங்களும்!*

*ஹிமாச்சலப்பிரதேசம், ராம்பூர் பணித்தளம். தம்னி கிராம நரேந்தர் குமார், நமது தன்னார்வ ஊழியர் பிரகாஷ் சந்தின் பக்கத்து வீட்டுக்காரர். இவர் கோவேறு கழுதைகளை வைத்து ஆப்பிள் பழ வியாபாரம் செய்பவர். இவரிடத்தில் சொந்தமாக 3 கழுதைகள் இருந்தன. இவர் வியாபார சந்தையில் குறைந்த விலைக்கு இவ்வியாபாரம் செய்பவர்களை வியாபாரம் செய்யவிடாமல் தடுத்து வந்தார். திடீரென இவரது 2 கழுதைகள் எதிர்பாராத விதத்தில் இறந்து போயின. நரேந்தர் தனது கெட்ட எண்ணத்தினால் இது நிகழ்ந்தது என்பதையுணர்ந்து, இதில் பிரகாஷின் மௌனத்தைக் கண்டு வியந்தவராக இருந்தார். பின் தனது வலது இடுப்பு மற்றும் அதற்குக் கீழ்ப்பகுதியில் உணர்வற்ற தன்மை காணப்படுவதை முன்னிட்டு, வேறொரு சுதேச ஊழியரை அணுகி, தனக்காக ஜெபிக்கும்படி கூறினார். ஆயினும், உடல்நலம் தேறவில்லை. எனவே, பிரகாஷை தொலைபேசியில் அழைத்து, தான் ஞாயிறு ஆராதனையில் கலந்துகொள்ள விரும்புவதாகக்கூறி, தனது குடும்பத்தாருடன் கிரமமாக ஆராதனைக்கு வரத் தொடங்கினார். பின்பு பிரகாஷையும் அழைத்து தனக்காக ஜெபிக்கும்படி கேட்டார். தற்போது சற்று சுகமாகி வருவதாக சபையில் சாட்சிக்கூறி, தேவ நாமத்தை மகிமைப்படுத்தியுள்ளார். அல்லேலூயா!*

**15**
**ஜூலை**
**சனி**

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. கரோலின் ராணி வில்லியம்
திரு. ஜித்தேந்தர டிகல்
திரு. பட்வி சோமாலியா மன்சுபாய்
திருமதி. சுகுணா அருள் ஆசீர்
திரு. வால்வி நேதாஜி டாடு
திருமதி. ராவுத் ஆஷா கோன்கனி சம்பத்

## தும்கா:
## பென்ஹர் M. & மேரி ஜான்சி ராணி

**துதிக்க:** சுவிசேஷம் 2425 பேருக்கு முதல்முறையாகப் பறைசாற்றப்பட்டுள்ளது. அதில் 27 பேர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு விசுவாசிகளாகியுள்ளனர். தீராத தொடர் தலைவலி பிரச்சினை யிலிருந்து சுகந்தியும், முதுகுத்தண்டுவட வலியிலிருந்து சோரேனும், பக்கவாத நோயிலிருந்து சிப்லோன்கிரியும், நெஞ்சு வலியிலிருந்து சர்காராவும், வலிப்பு நோயி லிருந்து மீராவும் சுகம் பெற்றுள்ளனர். 21 கிராமங்களில் இயேசுத்திரைப்பட ஊழியமும், 45 கிராமங்களில் இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகளும், ஆவிக்குரிய பயிற்சி வகுப்புகளும் எந்த இடையூறும் இல்லாமல் நடந்து முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடும் வயிற்று வலியிலிருந்து நமது புதிய விசுவாசி மதகாரா முர்மு அற்புத சுகம் பெற; கிறிஸ்துவை இரட்சகராக ஏற்க ஆயத்தமாயிருக்கும் மோதிலால் மராண்டி தனது விசுவாசத்தில் திடமாய் நிலைத்திருக்க; கிறிஸ்துவை இரட்சகராக ஏற்க தனிப்பட்ட விதத்தில் வழிநடத்தப்படும் பஸ்கோ கிராம மந்திரவாதியான மராண்டி மாண்டு விசுவாசத்துடன் கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர; இங்குள்ள அனைத்து கிராமங்களிலுமுள்ள ஞாயிறு வேதாகமப்பள்ளி ஆசிரியர்கள் சரியான முறையில் பயிற்றுவிக்கப்படவும், அவர்கள் மிகுந்த பயனுள்ள விதத்தில் சிறுபிள்ளைகளுக்கு வேதாகமத்தைக் கற்றுக்கொடுக்கவும்; சபை வளர்ச்சிக்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளில் சபை மூப்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்க ஜெபிப்போம்.

## ஜெய்பூர்: அசோக் நாயக் & சுரபி

**துதிக்க:** ஜெபத்தின் மூலம் காலுவும், லீலாவும் தங்களது சுகவீனங்களிலிருந்து சுகத்தை பெற்றுள்ளதோடு, அவர்கள் கிறிஸ்துவை தங்களது வாழ்வில் ஏற்றுக்கொள்ளவும் வழிநடத்தப்பட்டு வருகின்றனர். கோலாகுட்டு மற்றும் காந்தி குட்டு கிராமங்களிலிருந்து தனித்தனியே ஒவ்வொரு குடும்பம் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்க ஆயத்தமாயுள்ளனர். மாறிவரும் வானிலை சூழல்களிலும் விசுவாசிகள் மற்றும் வாலிபர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ள புதிய குடும்பங்கள் தங்களது விசுவாசத்தில் உறுதியாக நிற்க; கோலாகுட்டு மற்றும் குலுபுரு கிராம மக்களில் அநேகர் சுவிசேஷத்திற்கு தங்களது உள்ளங்களில் இடங்கொடுத்து, கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்க; சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணிகள் நேர்த்தியாக நடைபெறவும், நமது ஊழியர்கள் எடுத்த முயற்சிகளுக்கு நல்ல பலன் கிடைக்கவும்; இங்குள்ள ஊழியப்பணிகளைப் பூர்த்தி செய்ய 2 தன்னார்வ ஊழியர்களும், ஒரு சுதேச ஊழியரும் கிடைக்க ஜெபிப்போம்.

## 16 ஜூலை ஞாயிறு

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. வினோதினி ஜாண்சன், திரு. பர்னபாஸ் A.
திருமதி. சுனந்தா பெல்லி, செல்வி. கல்பனா சௌதரி

### கரோனி: ஏல்முல்வார் சுவப்னில் ராமலு & தட்வி மனிஷா

**துதிக்க:** சுவிசேஷம் 18 கிராமங்களைச் சென்றடைந்ததின் விளைவாக 205 பேர் முதல்முறையாக இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். சுனர்புன்ஜ் மற்றும் லர்பேரா கிராமங்களிலிருந்து 12 பேர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். கொடுக்கப்பட்ட சிறந்த ஆலோசனைகளின் மூலம் கடந்த 2 வருடங்களாக நமது பசித்குன்திஹ் திருச்சபை விசுவாசிகளிடையே காணப்பட்ட பிரச்சினை முடிவுக்கு வந்து, தற்போது அவ்விசுவாசிகளிடையே ஒருமனப்பாடு நிலவி வருகிறது. தங்களது சபை விசுவாசிகளைப் பயிற்றுவிப்பதற்கென காகர் திருச்சபையினர் நடத்திய 3 நாட்கள் ஆவிக்குரிய பயிற்சி நிகழ்ச்சிகள் தேவகிருபையால் நன்கு நடைபெற்று முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், விசுவாசத்தில் திடமாய் நிற்கவும்; நிர்மல் கிறிஸ்துவின்மீதுள்ள தனது விசுவாசத்தை எவ்வித தடையுமின்றி தைரியமாக அறிக்கையிடவும், எச்சூழ்நிலையிலும் விசுவாசத்தை விட்டு வழுவாமலிருக்கவும்; நெடுநாட்களாக இருக்கும் தோல் ஒவ்வாமை பிரச்சினையிலிருந்து கோபாலும், வயிற்றுக்கட்டி பிரச்சினையிலிருந்து ஆரத்தி தேவியும் சுகமடைய; இங்கு சபை ஆராதனையை நடத்த நல்லதொரு சபை மூப்பர் கிடைக்க; கல்லீரல் வீக்கப் பிரச்சினையிலிருந்து லக்ராதேவி பூரண சுகமடைய; நமது சபை மூப்பரான பய்ஜனாத் தனது சபை விசுவாசிகளைச் சந்தித்து, சபைச்செயல்பாடுகளில் அவர்களை உற்சாகமாக ஊக்கப்படுத்தி சபையை மேலும் பலப்படுத்த ஜெபிப்போம்.

### பத்னா & பர்ஹர்வா சந்தால் சிறுமியர் விடுதி:
### பீட்டர் பிரபாகரன் & விமலா

**துதிக்க:** புதிய விசுவாசிகள் 16 பேர் கிறிஸ்துவின் மந்தையில் வந்து இணைந்துள்ளனர். 5 கிராமங்களில் முதல் முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, 400 பேர் இயேசு இரட்சகரைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். 3 வேதாகமங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 20 இடங்களில் நடத்திய விசுவாசிகள் முகாம்கள் விசுவாசிகளுக்கு மிகுந்த பயனுள்ள விதங்களில் ஆசீர்வாதமாக இருந்துள்ளன. வலிப்பு நோயினால் 2 நாட்களாக சுயநினைவற்றிருந்த சாமி முர்மு ஜெபத்தின் மூலம் சுகம் பெற்று, உடல்நலம் தேறி வருகிறார். இப்பணித்தளத்தில் வைத்து 3 இடங்களில் சபை மூப்பர்களுக்கான கூடுகைகளும், ஒரு குடும்ப கருத்தரங்குக் கூடுகையும், 2 இடங்களில் வாலிபர் கூடுகைகளும் சிறந்த முறையில் நடந்து முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சத்ரா பாஸ்ட்ரேட் பகுதியில் காணப்படும் குழப்பங்கள் யாவும் மறைய; எதிர்ப்புகளை மேற்கொள்வதற்கான பெலனும் ஞானமும் தேவனிடத்திலிருந்து கிடைக்க; விசுவாசிகள் தங்களின் விசுவாசத்தில் உறுதியாக இருக்க; சுகவீனமாயிருக்கும் தல்பாரியா விசுவாசிகள் பூரண சுகம் பெற; இங்குள்ள சிறுவர் பராமரிப்பு மையத்தில் பணிசெய்ய ஒரு ஆசிரியரும், ஒரு சமையற் பொறுப்பாளரும் கிடைக்க; 10-ம் & 12-ம் வகுப்புகளை முடித்திருக்கும் பிள்ளைகளுக்கு தேவ சித்தப்படி நல்ல கல்லூரிகளில் தகுந்த பாடப்பிரிவுகளில் இடம் கிடைக்க ஜெபிப்போம்.

## 17 ஜூலை திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. குமார் G., திரு. அகஸ்டியன் பிஜி

### சாந்தோபானி:

#### ஜேக்கப் ஞானப்பண்டிதன் & சாந்தி

**துதிக்க:** வெளிப்புற சந்திப்பு ஊழியம் 7 கிராமங்களில் நடைபெற்றுள்ளது. 27 கிராமங்களில் ஊழியப்பின்தொடர் பணியும், 2 கிராமங்களில் இயேசுத் திரைப்பட ஊழியமும் சிறப்பாக நடந்து முடிந்துள்ளன. ஜமா தாலுகாவிலுள்ள 32 கிராமங்களில் ஜெபநடை ஊழியம் நேர்த்தியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜாக்ராகி, பக்ஜோன்பா மற்றும் சர்வாபானி கிராமங்களில் ஒலி, ஒளி ஓவியக்கண்காட்சி நிகழ்ச்சிகள் எவ்வித தடங்கலுமின்றி நடந்து முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது சுதேச ஊழியரின் மனைவி சாவித்திரி தேவி பக்கவாதநோய்ப் பிரச்சினையிலிருந்து சுகமடைய; பாட்டுக் குழுவினர் அவ்வப்போது கூடிச்செயல்பட முடியாதபடி இருக்கும் தடைகள் யாவும் விலக; கோர்தா மொழிப்பேசும் வாலிபப்பிள்ளைகளுக்கு தகுந்த வாழ்க்கைத்துணைகளமைய; மீதமிருக்கும் 50-க்கும் அல்லது 60-க்கும் மேலான கிராமங்களில் ஜெபநடை ஊழியம் நடைபெற; சர்வாபானி கிராமத்தில் ஒலி, ஒளி ஓவியக்கண்காட்சி ஊழியத்தில் இடையூறு விளைவித்த போலா ராய் மற்றும் ஷரவன் ராய் மனந்திரும்ப ஜெபிப்போம்.

### ஜகன்நாத்பூர்:

#### பாசுதேவ் மால்தோ & பசந்தி

**துதிக்க:** தேவ வார்த்தை 6 கிராமங்களில் புதிதாக எடுத்துரைக்கப்பட்டு, அதன் மூலம் 70 பேர் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். அதில் 6 பேர் கிறிஸ்துவினண்டை வந்துள்ளனர். துர்சாய், ஜாம்ஜுய், சிகல் ஜோடா, பய்லூரி, ஜாம்திஹ், தாகுரணி மற்றும் புக்ரிபுரு கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியம் சிறந்த விதங்களில் நடைபெற்று முடிந்துள்ளது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின் சுமித்ராவின் பொருளாதார நிலை சற்று மேம்பட்டுள்ளது. இனந்தெரியாத பெலவீனத்தினிமித்தம் மயங்கி விழுந்த ஆஷிஷ் முண்டா ஜெபத்தின் மூலம் அப்பெலவீனத்திலிருந்து தேறி வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இங்குள்ள அனைத்து பணித் தளங்களிலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள சபை மூப்பர்களுக்கான பயிற்சிக்கூடுகைகள் யாவும் வெற்றிகரமாக நடந்து முடிய; 5 வருடங்களாக காசநோயினால் பாதிக்கப் பட்டிருக்கும் முதிர்வயதான சுரா என்பவர் அற்புத சுகமடைய; எல்லா வயதினருக்கு மான வேதாகம வகுப்புக்குழுவொன்று தொடங்குவதற்கான திட்டம் செயலாக்கம் பெற; வலிப்பு நோயிலிருந்து சுக்லால் சுகம் பெற ஜெபிப்போம்.

### நம்பிக்கை ஈந்த நற்சுகம்!

*சத்தீஸ்கட், லுடேக் பணித்தளம். பென்தா ஜோரி கிராமத்திலுள்ள 45 வயதான ஜிந்தல் கெர்கெட்டா, நமது புதிய விசுவாசி. இவர் 2 மாதங்களாக தேவ நம்பிக்கையுடன் ஆலயத்திற்கு வருகிறார். இவர் பக்க வாதத்தினால் பாதிக்கப்பட்டவரானதால் யாராவது ஒருவர்தான் இவரைச் சுமந்து கொண்டு ஆலயத்திற்கு வருவார்கள். ஆனால், தற்போது இவர் பிறர் உதவியின்றி தானாகவே ஆலயத்திற்கு வருமளவிற்கு தேவன் இவருக்கு நற்சுகத்தைக் கட்டளை யிட்டுள்ளார். அல்லேலூயா!*

**18 ஜூலை செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பென்ஹர் M.
திரு. அமிர்காந்த டிகல்
திரு. அருள்ராஜ் எபநேசர் D.
திரு. சாம் பால் A.

# மேற்கு வங்காளம்

## பாலுர்காட்: ஹரமோகன் & சுசம்மா

**துதிக்க:** புதிதாக 17 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி பகரப்பட்டதின் விளைவாக 400 புதியவர்கள் இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். அதில் 6 பேர் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்துள்ளனர். விடுமுறை வேதாகமப்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பெற்றோர் பணித்தளங்களில் நடத்தப்பட்ட அவ்வூழியங்களில் மிகுந்த ஆசீர்வாதத்திற்குரிய பாத்திரங்களாகத் திகழ்ந்துள்ளனர். சரீரப்புண்களிலிருந்து பசந்தியும், வலிப்பு நோயிலிருந்து சந்தோஷும், இரத்தழுத்தக் கோளாறி லிருந்து சஞ்ஜலியும் சுகம் பெற்றுள்ளனர். கத்னா கிராமத்தில் ஆலயம் கட்ட தனது நிலத்தை நன்கொடையாக அளிக்க மங்கல் விருப்பம் தெரிவித்துள்ளார். ஜடாய் திருச்சபையிலிருந்து பாபு கிஸ்கு சுதேச ஊழியராகப் பயிற்றுவிக்கப்பட தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தைக் கேட்பதில் ஆர்வம் காட்டும் பிஸ்வாஜித் மற்றும் சாகிப் கிறிஸ்துவை இரட்சகராக அறிந்து கொள்ள; எலோ மனக்கோளாறு சம்பந்தமான பிரச்சினைகளிலிருந்தும், ரூபாலி 25 வருடங்களாக இருக்கும் பெண்ணியப்பிரச்சினையிலிருந்தும், சப்ரிதி சிறுநீரகக் கோளாறிலிருந்தும் பூரண சுகமடைய; ராஜு, பஸ்மோனி, பிப்லப், பாரேஷ், நிமாஸ், ஸ்ரீலால் ஆகியோர் தூயாவியானவரால் இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தப்பட; சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்க ஆவலாய் இருக்கும் சந்தால் இனமக்களுக்காக; மங்கல்பூரில் கட்டப்படவுள்ள ஆலயக்கட்டுமானத்திற் கான அரசு ஆவணப்பணிகள் விரைவாக முடிக்கப்பட; ஜாடாய், மங்கல்பூர் மற்றும் பெலினி கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட ஜெபிப்போம்.

## *வீட்டாரனைவரும்!*

*உத்தரப் பிரதேசம், கைம்கன்ஜ் பணித்தளம். எட்டாஹ் கிராம சரண்தேவி தீய ஆவியின் தொந்தரவினால் அடிக்கடி சரீர பெலவீனத்திற் குள்ளானார். நமது சபை மூப்பர் சசி அவருக்குச் சுவிசேஷத்தைக் கூறி, ஒரு புதிய ஏற்பாட்டை வாசிக்கக் கொடுத்தார். ஆனால், அவர் அதை திருப்பிக்கொடுத்துவிட்டார். அதன்பின் அவர் அதிக பெலவீனத்திற் குள்ளானதால், மீண்டும் சபை மூப்பரைத் தேடி ஜெபிக்க வந்தார். தேவன் அற்புத சுகத்தைக் கட்டளையிட்டார். அதன் பொருட்டு அவர் தனது பழைய மத வழிப்பாட்டை விட்டுவிட்டு, கிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைக்கலானார். குற்றவியல் வக்கீலாக இருக்கும் அவரது மகன் முதலில் அவரைத் தடுத்தபோதிலும் பின்பு விரைவில் அம்மகனும் வேதத்தை வாசிக்கவும், இணையதளம் மூலம் தேவ செய்திகளைக் கேட்கவும் தொடங்கி, கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டார். பின்பு சரண்தேவியின் கணவரும் கர்த்தரால் தொடப்பட்டு, தற்போது அவ்வீட்டாரனைவரும் வேதம் வாசித்து ஜெபித்து கர்த்தரைப் பின்பற்றி வருகின்றனர். அல்லேலூயா!*

## 19 ஜூலை
புதன்

*உபவாச ஜெபநாள்*

### கங்காராம்பூர்: தீஹே & சரணி

**துதிக்க:** சுவிசேஷம் 5 கிராமங்களில் புதிதாக எடுத்துரைக்கப்பட்டு, அதன் மூலம் 780 பேர் முதல்முறையாக இயேசுவைக் குறித்து அறிந்துள்ளனர். அதில் 23 பேர் விசுவாசிகளாகி, கர்த்தரின் மந்தைக்குள் தஞ்சமடைந்துள்ளனர். பிற கிராம மக்களிடையே செய்யும் சுவிசேஷப்பணிகளில் நமது விசுவாசிகளில் பலர் அதிக வாஞ்சையுடன் தங்களது ஈடுபாட்டைக் காண்பித்து வருகின்றனர். ஜெபத்திற்கு வந்த துலசி கிஜு தனது பயஉணர்விலிருந்து விடுவிக்கப்பட்டு, கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். 10 கிராமங்களில் இயேசுத்திரைப்படம் திரையிடப்பட்டதில், 5 குடும்பங்கள் இயேசுவைப் பற்றி மேலும் அறிய அதிக விருப்பம் காட்டி வருகின்றனர். 8 கிராமங்களில் நடத்தப்பட்ட இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகளில் மக்களுக்குச் சுவிசேஷத்தைப் பகரும் பாக்கியம் கிடைத்துள்ளது. நடக்க முடியாமல் பல குருக்களின் மூலம் சுகம் கிடைத்துவிடுமென எண்ணி ஏமாந்து, பின்னர் கிறிஸ்துவின்மீது விசுவாசம் கொண்டு ஜெபித்தபோது, பூரண சுகமடைந்து நன்கு நடக்க ஆரம்பித்துள்ள பல்தான் டுடி மற்றும் மனோட்டிக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுனிலும் அவருடைய குடும்பத்தாரும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; சபை மூப்பர்கள் மற்றும் விசுவாசிகளின் குடும்பங்கள் யாவும் ஆவிக்குரிய முதிர்ச்சிக்கு நேராக வளரவும், ஆத்தும பாரம் உடையவர்களாக மாறவும்; சுஸ்மித்தாவிற்கும், நயானிக்கும் சுகப்பிரசவங்கள் நேரிடவும், அவர்களது குடும்பங்களில் தேவாசீர்வாதம் தங்கியிருக்கவும்; பெலுகார் ஆலயக்கட்டுமானப் பணிக்குத் தேவையான பொருட்கள் கிடைக்கவும், அப்பணி திட்டமிட்டுள்ளப்படி ஏற்ற வேளையில் சிறப்பாகச் செய்து முடிக்கப்படவும் ஜெபிப்போம்.

### இட்டாஹாார்: அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா

**துதிக்க:** பஸகார், தலிபிர், வெலியாமுனி, துட்கோல், காட்முச்தா, கக்லா, லெக்டா ஆகிய 7 கிராமங்களில் இயேசுத் திரைப்படம் காண்பிக்கப்பட்டதில், 400 பேர் சுவிசேஷத்தை அறியும் சிலாக்கியம் பெற்றுள்ளனர். ஜனும்குட்டு மற்றும் காட்முச்தா கிராமங்களிலிருந்து 17 பேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளனர். பன்பூல் கிராமத்தில் வைத்து நடத்தப்பட்ட வாலிபர் நிகழ்ச்சியில் 18 வாலிபர்கள் கலந்துகொண்டு தேவ வார்த்தையால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். மலோட்டி ஹஸ்தக்கிற்கு மூளையில் கட்டியிருப்பதாகக் கண்டறியப்பட்ட பிறகும் ஊக்கமான ஜெபத்தினால் அவர் சுகநலத்துடன் வாழ்க்கை நடத்த தேவன் கிருபை பாராட்டியுள்ளார். பஸகார் ஆலயக்கட்டுமானப்பணி சுமூகமாக நடைபெற்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் உறுதியாக இருந்து தங்களுடைய உறவினர்களையும் விசுவாசத்திற்குள் வழிநடத்த; மல்கு, சிமலி, சோபன் மற்றும் மிஸ்திரி கிறிஸ்துவை இரட்சகராக ஏற்க; வேதாகமப்பயிற்சி வகுப்புகளில் பங்கேற்ற பிஸ்வாஜித், சிரஞ்ஜித், ஹெம்ரோன், திரோமணி ஆகியோரின் குடும்பத்தினர்கள் ஊழியங்களில் பங்கெடுக்க; இப்பணித்தள விரிவாக்கப் பணிக்கு மேலும் 2 சுதேச ஊழியர்கள் கிடைக்க; நமது புதிய தன்னார்வ ஊழியர் ராஜன் முர்மு ஊழியத்தில் உண்மையுடனும் உறுதியுடனும் காணப்பட ஜெபிப்போம்.

## 20 ஜூலை
### வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ரெஜினி தாமஸ்
திரு. தோட்சுய்யோ ஷிம்ரா, திரு. அலெக்ஸ் பிரபு
திரு. ரமேஷ் பாபு K., திரு. பாபுஜி முர்மு

### ஜாம்போனி:
### இப்ராயிம் மாலி & புரோசன்சிதா

**துதிக்க:** சத்திய வசனம் 7 கிராமங்களில் முதல்முறையாக அறிவிக்கப்பட்டிருப்பதின் வாயிலாக 500 பேர் புதிதாக இயேசுவின் நற்செய்தியைக் கேட்டுள்ளனர். நடத்தப்பட்ட சிறுவர் நிகழ்ச்சியில் 26 சிறுபிள்ளைகள் கலந்துகொண்டு, தேவ வார்த்தையை நேர்த்தியாகக் கற்றுக்கொண்டுள்ளனர். ராபின் ராமா வேதாகமத்தை வாஞ்சையாகக் கற்றுவருவதுடன், கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்கும் நிலையிலும் உள்ளார். திபாலி முர்மு நமது ஊழியத்தில் நன்கு உதவிசெய்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை மேலும் அறிய விருப்பம் காட்டிவரும் கனிராம் இயேசு கிறிஸ்துவே மெய்யான தேவன் என்பதைக் கண்டுக்கொள்ள; மய்னா கிஸ்கு தீய ஆவியின் பிடியிருந்து விடுவிக்கப்பட; விசுவாசிகளைத் துன்புறுத்தும் மங்கல் முர்மு மற்றும் ராம்சேய் டுடு மனந்திரும்ப; ஊர்மிளா, ஹெம்ரோன், அதார், மணி மற்றும் சோரேன் விசுவாசத்துடன் கிறிஸ்துவண்டை வர; பிம்பூர் பகுதியில் நடைபெறவிருக்கும் நமது ஜீப்குழுவின் வெளிப்புற சந்திப்பு ஊழியம் திரளான ஆத்தும அறுவடைகளைத் தர ஜெபிப்போம்.

### கரன்டிகி:
### கய்தியென்ஜின் வய்ஃபெய் & மெலடி டிம்சோன்டிங்

**துதிக்க:** புதிதாக ஞாயிறு ஆராதனை நடத்தப்பட்டுள்ள சய்னுகுட்டு கிராமத்தி லுள்ள மக்கள் கிறிஸ்துவை அறிய அதிக வாஞ்சை காட்டி வருகின்றனர். 15 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அதன்மூலம் 195 புதியவர்கள் இயேசுவைப் பற்றி கேள்விப்பட்டுள்ளனர். இப்பணித்தளப் பகுதியில் ஊழிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அங்கிருக்கும் சுகவீன மானவர்களைச் சந்தித்து அவர்களிடையே ஜெப ஊழியம் நடைபெற்றுள்ளது. சிட்டுங்டோலா மற்றும் கபூர்டோலா கிராமங்களில் 2 இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகள் நடத்தப்பட்டுள்ளன. உல்குட்டு கிராமத்தில் நடைபெற்றுள்ள சிறுவர் கூடுகைகளுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சாடிபூர், சய்னுகுட்டு, பதுல், நியம்குட்டு மற்றும் உல்குட்டு கிராமங்களில் நடத்தப்பட்டுள்ள இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகளுக்குக் கிடைக்கும் நற்பலனாக அப்பகுதிகளில் இருக்கும் மக்கள் ஆவலாய் கிறிஸ்துவண்டை வர; விசுவாசத்தில் பின் மாற்றமடைந்துள்ள புத்து முர்மு மனந்திரும்பி, மீண்டும் கிறிஸ்துவிடம் வர; சந்தால் கிராமம் தேவ வார்த்தையால் சந்திக்கப்பட; ஆலய ஆராதனைகளில் பங்கேற்க விருப்பம் இல்லாமலிருக்கும் உல்குட்டு கிராமத்திலுள்ள சில விசுவாசிகளுக்காக; காசநோய்த்தொற்றிலிருந்து முன்னா சுகம்பெற; நமது ஊழியத்தில் இணைந்து பணிசெய்யும் நமது புதிய சுதேச ஊழியர் ஜெத்தா ஹெம்ரோமிற்காக; கிறிஸ்துவுக்குள் நமது விசுவாசிகள் நற்சாட்சியுள்ள வாழ்வு வாழ; சய்னுகுட்டு விசுவாசிகளின் மத்தியில் திருச்சபை அமைக்கப்பட ஜெபிப்போம்.

## 21 ஜூலை வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

செல்வி. பொன்மலர் ஞானசாந்தி
திரு. பால்ராஜ் R.

### சம்சி: தீப் ரத்னா & மித்லேஷ்

**துதிக்க:** வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளின் மூலம் 1000 நபர்கள் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். அதில் ஒருவர் மாத்திரம் விசுவாசியாகியுள்ளார். விசுவாசிகளல்லாதோர் மத்தியில் 21 இடங்களில் வெளிப்புற சந்திப்பு கூடுகைகள் சிறந்தமுறையில் நடைபெற்று முடிந்துள்ளன. லால் மோகனும், சீத்தாராமின் தகப்பனாரும் புகையிலை பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றுள்ளனர். ஜெபத்தின் மூலம் பக்கவாத நோய்ப்பிரச்சினையிலிருந்து போதம் சோரேன் சுகமடைந்துள்ளார். கொடா டோலா திருச்சபையினருக்கு சபை மூப்பராக மோகன் நியமிக்கப்பட்டிருப்பதோடு, அங்கே ஆலயம் கட்டுவதற்கும் ஒரு நிலம் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பயாகுட்டு மற்றும் லவகிராம் கிராமங்களில் புதிதாக ஆராதனை மையங்கள் தொடங்கப்பட; நுரையீரல் நோய்த்தொற்றிலிருந்து 3 மாத குழந்தை பூரண குணமடைய; வெளிப்புற சந்திப்பு ஊழியம் மூலம் 3 கிராமங்களில் வைத்து நடைபெற்ற விடுமுறை வேதாகமப் பள்ளியில் முதல்முறையாக கலந்துகொண்ட சிறுவர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளரவும், அவர்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்கவும்; பக்கத்து கிராமங்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கவிடாமல் தடுக்கும் கொடா டோலா கிராமத்திலிருக்கும் பாஸ்டர் கலிராம் மனந்திரும்ப ஜெபிப்போம்.

### குமார்கன்ஜ்:
### R. கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

**துதிக்க:** தபன் பகுதியில் வைத்து நடத்தப்பட்ட ஊழியத்தில் நமது ஊழியர்களோடு ரஞ்சன்காலசாவின் குடும்பமும் தேவ நாமம் மகிமைப்படும்படி கலந்துகொண்டுள்ளது. இயேசுத்திரைப்பட ஊழியம் மூலம் சுமார் 600 பேர் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டுள்ளனர். பஸ்பாடா திருச்சபையினருக்கு ஒரு சிறிய ஆலயம் கட்டுவதற்கு சோமேஷ் டுடு தனது நிலத்தை நன்கொடையாக ஈந்துள்ளார். பல்வேறு பெலவீனங்களில் சிக்குண்டிருந்த நமது விசுவாசிகளை அதிலிருந்து விடுவிக்கும் பொருட்டு தேவ வல்லமை அதிசயமாக அவர்கள் மத்தியில் இடைப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய பகுதிகளில் ஊழியத்திற்காகச் செல்லும்போது தேவ சித்தத்தை நமது ஊழியர்கள் பிரத்தியட்சமாகப் பகுத்தறிய; கங்காராம்பூர் மற்றும் தொப்பம் கிராம நமது விசுவாசிகள் தங்களது உற்றார் உறவினர்கள் மத்தியில் தங்களுடைய வாழ்க்கை மூலம் கிறிஸ்துவின் அன்பை நற்சாட்சியாகப் பகர; பழைய பாவ தீய பழக்கவழக்கங்களில் சிக்கியிருக்கும் நமது விசுவாசிகள் விரைவில் அவைகளிலிருந்து பூரணமாக விடுபட; வரும்நாட்களில் நடக்கவுள்ள ஜெபக்குழுத்தலைவர்கள் முகாம், சபை மூப்பர்கள் முகாம், இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகள், இயேசுத்திரைப்பட ஊழிய நிகழ்ச்சிகள், பெரிதளவிலான வெளிப்புற சந்திப்பு ஊழியக்கூடுகைகள், விசுவாசிகள் முகாம், சபை மூப்பர்கள் முகாம் மற்றும் வீட்டு ஜெபக்கூட்டங்கள் யாவும் வெற்றிகரமாக நடந்துமுடிய ஜெபிப்போம்.

**22**
**ஜூலை**
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. தர்மராஜ் R.R.
திரு. எபநேசர் சாமுவேல் A.

## அஸோம்

### கோஹ்பூர்: நாத்தான் குமார் பெபர்த்தா & நிருபோமா

**துதிக்க:** சுவிசேஷ வசனம் 700 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சிரகுவா கிராமத்தில் புதிய ஆராதனைக்குழுவொன்று தொடங்கப்பட்டுள்ளது. விசுவாசிகளின் ஜெபத்தினால் ரிஷா போரோ 13 மி.மீ அளவிலான சிறுநீரகக்கல் பிரச்சினையிலிருந்து அற்புதமான சுகம் பெற்றுள்ளார். புருத்தோமி பட்கிரி கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளார். 2020-ம் ஆண்டிலிருந்து தீய ஆவியின் ஆட்கொள்ளுதலினால் கடும் பெலவீனத்திற்குள்ளாகி இருந்த ஜோடு குட்டும் தொடர் உபவாச ஜெபத்தினால் பூரண சுகவிடுதலையைப் பெற்றுள்ளார். விசுவாசிகளின் பிள்ளைகள் அரசாங்கப் பொதுத்தேர்வுகளில் நற்தேர்ச்சி பெற்றதோடு, அவர்களுக்குரிய மேற்கல்விக்கான இடங்களில் சேர நல்ல வாய்ப்புகளும் கிடைத்துள்ளன. ரதுல் பசுங்கிற்கு நல்ல அரசாங்க வேலை கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கொர்பட்டி கிராம திருச்சபை விசுவாசிகளுக்கு தேவனைக்கூடி ஆராதிக்க நல்லதொரு நிலம் கிடைக்கவும், அனைத்து விசுவாசிகளும் தொடர்ச்சியாக ஞாயிறு ஆராதனைகளில் பங்கு பெறவும் ஜெபிப்போம்.

## சத்தீஸ்கட்

### துர்கொண்டல்:

### பாபுஜி முர்மு & வயலட் ஹன்ஸ்தா

**துதிக்க:** பெரியளவிலான வெளிப்புற சந்திப்பு ஊழியக்கூட்டங்கள் மூலம் 42 கிராமங்களைச் சார்ந்த 340 பேருக்குப் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. போடேலி கிராமத்திற்கு நமது ஊழியர்கள் ஊழியம் செய்யச் சென்றபோது மக்களை மத மாற்றுகிறோம் என்று அங்குள்ள நகர ஆய்வாளர் ஊழியர்களிடம் கடுமையாக வாக்குவாதம் செய்தபோதிலும், அங்கு அன்று ஊழியத்தை முடித்துவர தேவன் பாராட்டியுள்ள கிருபைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நகர ஆய்வாளர் எழுப்பிய எதிர்ப்பின் நிமித்தம் நமது ஊழியர்களின் வீட்டு உரிமையாளர் தனது வீட்டைக் காலி பண்ண ஊழியர்களிடம் சொல்லியிருப்பதால், அவர்களுக்கு வேறு நல்லதொரு வீடு கிடைக்க; இந்த எதிர்ப்புப் பிரச்சினையினிமித்தம் கிராம மக்களிடையே சுவிசேஷத்தின் மீது நாட்டம் காட்டுவதற்கு ஏற்படும் பயஉணர்வு நீங்க; இவ்விடத்தில் பணிசெய்யும் நமது ஊழியர்களுக்கு சுவிசேஷத்திற்கான நல்ல அநுகூலமான வாசல்கள் திறக்கப்பட; நமது புதிய தொடர்பாளர்களான மாதவி, கவுடி, மனேஷ் நரோட்டி, சாகு, கமலேஷ் ஆகியோரின் குடும்ப அங்கத்தினர்களும் கிறிஸ்துவை விசுவாசிக்க துவங்க ஜெபிப்போம்.

## 23 ஜூலை ஞாயிறு

### லுடேக்: கருணாகரன் & எலிசபெத்

**துதிக்க:** லுடேக்கில் வைத்து நடைபெற்ற ஆவிக்குரிய பெருவிழாவில் தேவநாமம் மகிமைப்படும்படி 200 பேர் கலந்துகொண்டு அவ்விழாவைச் சிறப்பித்தனர். அதிக ஜெபத்துடன் சிவ்பூர் ஆலயக்கட்டுமானப் பணி துவங்கப்பட்டுள்ளது. 11 பேர் புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவுக்குள் துணிவுடன் அறிக்கையிட்டுள்ளனர். திருமணமாகி 9 வருடங்களுக்குப்பின் நமது ஊழியரின் மூத்த மகனுடைய குடும்ப வாழ்வில் குழந்தை பாக்கியம் கிடைத்துள்ளது. காசநோய் பிரச்சினையிலிருந்து அம்மரிபக்கா பூரண குணமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இங்குப் பணி செய்துவந்த சுதேச ஊழியர் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஊழியத்தை விட்டுச் சென்றிருப்பதினால், விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வு பாதிக்காமலிருக்க; இங்கு நடைபெற்றுவரும் ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் நிறைவடைய; மார்பகக்கட்டி பிரச்சினையிலிருந்து ஜெயா மின்ஸ் அற்புத சுகம் பெற; ஃபெபினாவும், விரோவும் தங்களது சரீரப்பெலவீனங்களிலிருந்து முழு சுகமடைய; தவ்னாரா கிராமத்தில் ஆலயம் கட்ட நல்லதொரு நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

## ஒடிசா

### டேங்கானல்:

### சந்து மராண்டி, சுரேஷ் மால்தோ

**துதிக்க:** தேவ வார்த்தை 4 கிராமங்களில் அறிவிக்கப்பட்டதின் விளைவாக 580 பேர் புதிதாக இயேசுவைக் குறித்து அறிந்துள்ளனர். ஒருவர் விசுவாசியாகி கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்துள்ளார். ஹரிதபாடா மற்றும் பசய்பட்டு கிராமங்களில் புதிய விசுவாசிகளுக்கான பயிற்சியொன்று நடத்தப்பட்டுள்ளது. நமது ஊழியர் சந்து மராண்டியின் திருமணம் தேவாசீர்வாதத்துடன் நடந்து முடிந்துள்ளது. பாலாசுனி, பர்காசி, சாதுமுண்டா மற்றும் சாரியோ கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணிகள் யாவும் சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளன. ஜெபத்தின் மூலம் சரஸ்வதி மும்தா தனது பெலவீனத்திலிருந்து சுகமடைந்துள்ளார். ஒரு மாதக் காலமாக நடக்க முடியாமல் பெலவீனத்தில் இருக்கும் ராவுத் சன்தி தேவகிருபையால் நல்ல சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காசநோயினால் அவதிப்படும் சுஷாந்தா, ஹரிஷ், சரோஜனி ஆகியோர் முழுமையான சுகமடைய; சுவிசேஷத்தின் மீது அக்கறை காட்டும் சரங்கோன் கிராமத்திலுள்ள 5 குடும்பத்தினர்கள் யாவரும் இரட்சிக்கப்பட; ஜய்தம்தார்பூர் ஆலயக்கட்டுமானப்பணி குறித்த நேரத்தில் முடிவடைய ஜெபிப்போம்.

### நல்லதொரு மனமாற்றம்!

*ஜார்க்கண்ட், சாந்தோபானி பணித்தளத்தைச் சார்ந்த மகாதேவி மதுபானம் விற்பவர். நமது மிஷனரிகள் அவரைக் கிராமத் தெருவொன்றில் சந்தித்து, அவரிடம் சுவிசேஷத்தைப் பகர்ந்தனர். சுவிசேஷத்தைக் கேட்டதும், அவர் தேவாவியானவரால் பாவ உணர்வைப் பெற்று மனங்கசந்து அவரும் அவரது மகனும் அங்கேயே அழத் தொடங்கினர். பின்பு பாவ அறிக்கை ஜெபம் செய்து, கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். நமது மிஷனரிகளும் அவருக்காக ஜெபித்து, மாற்றுத்தொழில் செய்ய பரிந்துரை செய்துவிட்டு வந்தனர். அல்லேலூயா!*

## 24 ஜூலை திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆல்பர்ட் சாமுவேல்
திரு. சதீஷ் T.

### கியோன்ஜர்:

**பிரத்யூஷ் நாயக் & மரிதாய் லியோனா**

**துதிக்க:** புதிதாக சுவிசேஷம் 15 கிராமங்களில் பறைசாற்றப்பட்டுள்ளதின் மூலம் 983 பேர் இயேசு இரட்சகரைக் குறித்து அறிந்துள்ளனர். அதில் 19 பேர் விசுவாசிகளாகி கிறிஸ்துவின் மந்தையில் அடைக்கலம் புகுந்துள்ளனர். கிடியாகுதுர் கிராம நமது புதிய விசுவாசிகள் கிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைத்ததின் விளைவாக தங்களது வீடுகளிலிருந்து அவர்கள் துரத்தியடிக்கப்பட்ட நிலையில், தேவன் கொடுத்த தைரியத்தின் அடிப்படையில் எதிர்ப்போர்மீது அவர்கள் வழக்கு தொடர்ந்தபோது, அக்காரியம் ஒன்றுமில்லாமல் போய்விட்டது. 8 இடங்களில் வைத்து நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியம் மூலம் 619 பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். கடம்திகி ஆலயக்கட்டுமானப்பணி நல்ல முறையில் நடந்தேறி வருகிறது. தேவ கிருபையால் நமது சுதேச ஊழியர் ரசிகாவின் குடும்பத்தில் யாவரும் தெய்வீக சுகத்தை அனுபவித்துள்ளனர். 3 இடங்களில் கல்வித்திட்ட நிகழ்ச்சிகள் நடத்த தேவன் காண்பித்துள்ள தயவிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவின்மீது கொண்டுள்ள விசுவாசத்தின் நிமித்தம் பொது இடங்களில் தண்ணீர் எடுக்க மறுக்கப்பட்டுள்ள குசும்ஜுடி கிராம விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்து நிற்கவும், எதிர்ப்பாளர்களின் மனங்களை அவர்கள் வெல்லவும்; மிசூர் ஹெம்ரோமின் குடும்பப்பிரச்சினை ஜெபத்தின் மூலம் சுமூகமான தீர்வை அடைய; சந்திரா முண்டாவை இழந் திருக்கும் அவரது குடும்பத்தினரின் மன ஆறுதலுக்காக; மமலபோஷி கிராம புதிய ஆலயக்கட்டுமானப்பணி தொய்வில்லாமல் நடைபெற; நமது ஆராதனையில் புதிதாக வந்து பங்கேற்கும் ரங்கா போத்ரா தனது விசுவாசத்தை கிறிஸ்துவின்மீது மாத்திரமே அறிக்கை செய்ய; சுதேச ஊழியர் மற்றும் சபை மூப்பர்களிடையே ஊழியத்தில் ஒற்றுமை காணப்பட ஜெபிப்போம்.

## பெரிய மனம் படைத்த பெரியவர்!

*உத்தராகண்ட், தினேஷ்பூர் பணித்தளம். நமது வாலிப விசுவாசி பவன் தனது ஆட்டோ ரிக்ஷாவில் கல்யாண வீட்டிற்கான வாடகைச்சாமான்களை ஏற்றிக்கொண்டு செல்லும்வழியில், ஆடு மேய்த்துக்கொண்டிருந்த பெரியவர்மீது ஆட்டோ ரிக்ஷா மோதியது. அதனால் அப்பெரியவர் படுத்தப்படுக்கையாகிப் போனார். அவருடைய குடும்பத்தினர் பவனிற்கு ஏதாவது ஊறு விளைவிப் பார்களோ அல்லது அதிகப்பணம் கேட்பார்களோ என பவனின் ஏழ்மை குடும்பம் மனம் பதறியது. தேவனை நோக்கி ஜெபித்தனர். அதன் விளைவு, அப்பெரியவர் தான் மரிக்கும்முன் தனது குடும்பமக்களை அழைத்து, பவனிற்கு எத்தொந்தரவும் கொடுக்கக்கூடாது என வேண்டி கேட்டுக்கொண்டு, மரித்துப்போனார். எனவே, தேவகிருபையால் பவனின் குடும்பம் எப்பாதிப்புமின்றி பாதுகாக்கப்பட்டதுடன், தேவ நாமமும் மகிமைப்பட்டது. அல்லேலூயா!*

**25**
**ஜூலை**
**செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மரகதமணி ரூபன்
திரு. மணிமாறன் D., திரு. ஆனந்தன் M.

### ரிமுலி: சங்கர் P. & ஜெலின்

**துதிக்க:** முதல்முறையாக சுவிசேஷத்தைக் கேட்டுள்ள 15 கிராமங்களிலுள்ள 4500 நபர்கள் மத்தியில் 300 புதிய ஏற்பாடுகளும், 5 வேதாகமங்களும் பகிரப்பட்டுள்ளன. நமது விசுவாசியொருவரின் மகன் சிராஜ் தனது வேலை ஸ்தலத்தில் ஏற்பட்ட மின்னதிர்வு விபத்தின் பேராபத்திலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளார். ஜெபத்தின் மூலம் நமது புதிய விசுவாசிகளான குனித் மற்றும் பத்ரா தங்களுடைய சுகவீனங்களிலிருந்து நல்ல சுகம் பெற்றுள்ளனர். தனது வீட்டிலிருந்து சாராயம் விற்கும் தீயப்பழக்கத்தை நமது விசுவாசி நிரன் முண்டா முற்றிலுமாக நிறுத்திக் கொண்டுள்ளார். படிப்பறிவில்லாத போதிலும் நமது ரூத் மற்றும் தெபோராள் குழு விசுவாசிகள் வேத வசனங்களை அழகாக மனனம் செய்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரோருவான் பகுதியில் ஊழிய ஆய்வுப்பணி மேற்கொள்ளப்பட; கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தைத் துணிவுடன் அறிக்கை செய்ய ஆயத்தமாயிருக்கும் ராமு மற்றும் ரகுநாத் முண்டாவின் குடும்பங்களுக்காக; வேத வாசிப்பு மற்றும் ஜெப வாழ்வில் நமது விசுவாசிகள் நாளுக்குநாள் நல்வளர்ச்சி காண; மிதுன், மோதிலால், அவினாஷ், பிசோன்தா ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; தாங்கள் கொண்டிருக்கும் கிறிஸ்தவ விசுவாசத்தின் பொருட்டு, தங்களுடைய கிராம மக்களால் உபத்திரவத்திற்குள்ளாகும் நமது விசுவாசி கீதா முண்டாவின் குடும்ப அங்கத்தினர்கள் விசுவாசத்தில் தைரியமாக நிலைத்து நிற்க ஜெபிப்போம்.

## குஜராத்

### போடேலி: ஏசுபாபு & உஷா

**துதிக்க:** குந்தன்பூர் கிராமத்தில் வைத்து நடைபெற்ற வாலிபர் கூடுகையில் 80 வாலிபர்கள் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். சுவிதா கிராமத்தில் வைத்து நடத்தப்பட்ட இரவுநேர ஆவிக்குரிய கூடுகையில் பக்கத்து கிராமங்களைச் சார்ந்த மக்களும் கலந்துகொண்டு, சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். பங்கபுரா கிராமத்தில் சிறிய ஆராதனைக்குழுவொன்று தொடங்கப்பட்டுள்ளது. மிஸ்லிபேன் புற்றுநோயிலிருந்து அற்புத சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசியாக இருந்து பின்மாற்றமடைந்து தீய ஆவிகளின் தொந்தரவிற்கும், நரம்பு பிரச்சினைக்கும் ஆளாகி, தேவ கிருபையினால் மீண்டும் ஜெபத்தினால் சுகம்பெற்றுள்ள ஹிமாத், தனது விசுவாச வாழ்வில் கிறிஸ்துவோடு நிலைத்து நிற்க; தீ விபத்தினால் கை, கால்களில் காயங்கள் ஏற்பட்டு அதிக வலியினால் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் விக்ரம் பூரண சுகமடைய; நமது விசுவாசிகளின் பிள்ளைகளுடைய படிப்பிற்காகவும், அவர்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்படவும்; சுவிசேஷம் அறிவிக்கப்படாத புதிய கிராமங்களில் அதை அறிவிப்பதற்கான வாசல் கிடைக்க ஜெபிப்போம்.

26
ஜூலை
புதன்

உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கிங்ஸ்லி G.
திருமதி. சுகி மலர் வினு

## சொரம்பா:
### புஷ்பராஜ் & ஜோதி நிர்மலா

**துதிக்க:** பாதல், பிட்டோய், மாதவ் மற்றும் கொர்பாத் கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டதில் 33 பேர் இயேசுவைக் குறித்து அறிந்துள்ளனர். குடல் அழற்சி பிரச்சினையிலிருந்து சாமுவேல் சுகமடைந்துள்ளார். தயாபாயின் மகள்களில் ஒருவருக்கு கண்பார்வை கோளாறு சீராகியுள்ளது. ஊழியர்களின் ஜெபத்தின் மூலம் புதிய விசுவாசி சோனிபேனிற்கு சிறுநீரகக்கல் பிரச்சினையிலிருந்து நன்கு சுகம் கிடைத்துள்ளது. கஸ்வாவ் திருச்சபையில் சபை மூப்பர்களுக்கான கூடுகையொன்று நடத்தப்பட்டு, அதில் அவர்கள் தேவனுக்காக உத்தமமாய் வாழ ஊக்குவிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தயாபாயின் குடும்பத்தில் மீதமுள்ளவர்களுக்கும் சீரான கண்பார்வை கிடைக்க; கிறிஸ்துவின்மீது கொண்டுள்ள பற்றினிமித்தம் துன்புறுத்தலுக்குள்ளாகும் நமது பூத்வாடா கிராம விசுவாசிகளான பிரியா, ராதா மற்றும் மித்திற்காக; திருமணபந்தத்தில் உண்மையற்று காணப்பட்டதால் தனது கணவரை விவாகரத்து செய்ய முற்படும் தீபிகாபேனின் குடும்ப வாழ்வில் தேவன் குறுக்கிட; தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து மகிமா மற்றும் தர்மிபேன் விடுவிக்கப்பட; வயிற்றுக்கட்டியிலிருந்து அர்ச்சனாபேன் சுகம் பெற; மாந்திரீகச் செயலினால் பூனை வடிவில் அச்சுறுத்தப்படும் தீய ஆவியின் தொந்தரவிற்கு உட்பட்டிருக்கும் சுரேஷ் அற்புத விடுதலை பெற ஜெபிப்போம்.

# தாத்ரா & நகர் ஹவேலி

### சில்வாசா: டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்

**துதிக்க:** கர்த்தருடைய வார்த்தையை 858 பேர் முதல்முறையாகக் கேட்டுள்ளனர். அதில் 14 பேர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். 3 கிராமங்களில் வாலிபர்களுக்கான வேதாகம வகுப்புகள் மிகுந்த பயனுள்ள விதத்தில் நடந்து வருகின்றன. போன்தா கிராம சாலாவும், ரதியும் பாம்புக்கடியிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளனர். குடிப்பழக்கத்திற்கு அடிமையாயிருந்த மகிந்திரா அதிலிருந்து விடுதலை பெற்றுள்ளார். எவ்வித தடையுமின்றி 12 இடங்களில் வைத்து வெகு சிறப்பாக பெண்களுக்கான ஆவிக்குரிய கூடுகைகளை நடத்தி முடிக்க தேவன் பாராட்டியுள்ள தயவிற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மாடிப்படியிலிருந்து கீழே விழுந்ததினால் முதுகுத்தண்டுவடத்தில் காயம் ஏற்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் சத்ருபேனிற்கு பூரண சுகம் கிடைக்க; விசுவாசியொருவரின் மகன் விஜய் மனந்திரும்பி, விருப்பத்தோடு ஆலயத்திற்குக் கிரமமாக வர; குடலிறக்கப் பிரச்சினைக்கான அறுவை சிகிச்சையை மேற்கொண்டிருக்கும் மந்தியா விரைவில் முழு சுகமடைய; அனில், ஜஸ்வந்த், சோனு, சோட்டு ஆகிய வாலிபர்கள் அதிக ஆர்வமுடன் ஆலய ஆராதனைகளில் வந்து தேவனை ஆராதிக்க; சவிதாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க; தூத்பாடாவில் வைத்து நடைபெற்ற வாலிபர் கூடுகையில் பங்கேற்ற அனைத்து 44 திருச்சபைகளைச் சார்ந்த வாலிபர்களும் கிறிஸ்துவில் நன்கு விசுவாசத்துடன் வளர ஜெபிப்போம்.

## 27 ஜூலை
வியாழன்

### ராண்தா விடுதி:
**மர்குஸ் மால்தோ & சாரா; சந்திரிகாபேன், மனிஷா லக்ரா**

**துதிக்க:** விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியங்களில் பங்கேற்ற சிறு பிள்ளைகள் ஆவிக்குரிய பயனடைந் துள்ளனர். 24 சிறுவர்களும், 5 சிறுமி களும் இவ்வருட புது சேர்க்கையாக நமது விடுதியில் வந்து சேர்ந்துள்ளனர். 10-ம் வகுப்பு அரசாங்கப் பொதுத் தேர்வு எழுதிய நமது அனைத்து விடுதிப்பிள்ளைளும் நல்ல திருப்தி கரமான மதிப்பெண்களோடு வெற்றி பெற்றுள்ளனர். நமது விடுதி சமையல் பொறுப்பாளரின் மகன் சாம் ஜாஷ்வா விற்கு ஆங்கிலவழிக்கல்வி பள்ளிக் கூடத்தில் சேருவதற்கான வாய்ப்பு கிட்டியுள்ளது. திருநெல்வேலியைச் சார்ந்த ஜெபக்குழுவினர் நமது விடுதிப்பிள்ளைகளைச் சந்தித்து, அவர்களை உற்சாகப்படுத்திச் சென்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 12-ம் வகுப்பு முடித்துள்ள நமது விடுதிப்பிள்ளைகளுக்கு நல்ல கல்லூரிகளில் படிக்க இடம் கிடைக்கவும், அங்கே அவர்கள் தேவனுக்குச் சாட்சியாக வாழவும்; 8-ம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள பிள்ளைகளுக்கு வேறு பள்ளியில் 9-ம் வகுப்பில் சேருவதற்கான இடம் கிடைக்க; விடுதியில் புதிதாக வந்து சேர்ந்திருக்கும் பிள்ளைகள் விடுதிச்சூழ்நிலைகளைச் சாதகமாக ஏற்றுக்கொண்டு, கல்வி நிலைகளிலும் ஆவிக்குரிய வாழ்விலும் சிறந்து விளங்க; விடுதி மாணவிகளுக்கு கூடுதல் தங்கும் வசதிகளை ஏற்படுத்துவதற்காக நடைபெற்றுவரும் கட்டிடக்கட்டுமானப் பணி யாவும் சுமூகமான முறையில் நடந்து முடிய ஜெபிப்போம்.

### கான்வேல்: **அருள் ஆசீர் & சுகுணா**

**துதிக்க:** அநேக நாட்களாக ஜெபித்த ஜெபத்திற்குப் பதில் கிட்டியவண்ணமாக விபுல் மற்றும் பாரேஷிற்கு நல்ல வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளன. குடிக்கு அடிமைப்பட்டிருந்த வசுனா பாபு அதி லிருந்து முழுவிடுதலை பெற்றுள்ளார். சிறு வயதிலிருந்தே காணப்பட்ட கடும் மூச்சிரைப்பு பிரச்சினையிலிருந்து ஜெபத்தின் மூலம் கின்னோலி அற்புத சுகமடைந்துள்ளார். ஊக்கமான உபவாச ஜெபத்தின் மூலம் சுதாபேன் மற்றும் சந்திரகலாபேன் திருமணமாகி 4 வருடங்களுக்குப்பின் தற்போது அவர்கள் மழலை பாக்கியங்களைப் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புற்றுநோய் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ள நமது புதிய விசுவாசி கோவிந்திற்கு பரிபூரண சுகம் கிடைக்க; கடந்த 10 வருடங்களாக கால் வீக்கப் பிரச்சினையினால் மனமுடைந்து காணப்படும் துளசிபேன் அற்புத சுகம் பெற; சில வருடங்களாகவே குழந்தை யில்லாமல் இருக்கும் தீபிகாபேனிற்கு மழலை பாக்கியம் அருளப்பட; காசநோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் திலீப் முழு சுகமடைய ஜெபிப்போம்.

## 28
## ஜூலை
வெள்ளி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜேக்கப் பிரதீப் குமார்
திரு. பால் ஆல்பர்ட், திரு. ஆபிரகாம் D.
திருமதி. கோமா கோவிந்தராஜ்

# மகாராஷ்டிரா

### இகத்புரி: நாகராஜன் & திலகவதி

**துதிக்க:** நசேரா கிராமத்தில் புதிதாக ஜெபக்குழு, ஆராதனைக்குழு மற்றும் பெண்கள் ஜெபக்குழு ஆகியவைகள் தொடங்கப்பட்டுள்ளன. ஜுனாவனவாடி கிராமத்தில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் கிடைத்துள்ளது. சீமந்த்பாரி கிராமத்தில் தேடுவோர் முகாமொன்று நடத்தப்பட்டுள்ளது. 11 பேர் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டு, கிறிஸ்துவின் மந்தையில் விசுவாசிகளாக சேர்ந்துள்ளனர். கினிஸ்தா, அரிஸ்தடக்கா, ஜுனாவனவாடி ஆகிய கிராமங்களில் ஊழியப் பின்தொடர்பணிகள் செய்யப் பட்டுள்ளன. கரோலி மற்றும் சிர்செட் கிராமங்களில் புதிய விசுவாசிகளுக்கான பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அவேலி கிராமத்தில் நமது விசுவாசிகளை ஆராதனைக்கு வரவிடாமல் அச்சுறுத்தும் உயர் ஜாதி என அழைக்கப்படும் மக்கள் மனந் திரும்ப; ஹரிசந்தர் தீய ஆவியின் கட்டுகளிலிருந்து விடுபட; முக்கானி, காவ்நய், வகுபச்சாவாடி, தர்காவ் ஆகிய கிராமங்களில் இருக்கும் எதிர்ப்புகள் மறைந்து அங்கே சுவிசேஷம் தழைத் தோங்க; ஒரேயொரு புதிய தொடர்பாளரைக் கொண்டுள்ள கரோலி கிராமத்தில் புதிதாக ஆராதனைக்குழுவொன்று ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

### டிண்டோரி:
### அலெக்ஸ் பிரபு & பிரியா கெத்ஸி

**துதிக்க:** தேவ்தான், லடுச்சி, நாகைபாடா, நல்வாடி ஆகிய கிராமங்களில் புதிதாக சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட்டுள்ளன. வில்லுந்தி கிராமத்தில் புதிதாக இரவுநேர ஜெபக்கூடுகையொன்று தொடங்கப் பட்டுள்ளது. 16 வேதாகமங்கள் மக்க ளிடையே பகிரப்பட்டுள்ளன. தீய ஆவியின் தொந்தரவினால் கிணற்றிற்குள் விழுந்த 15 வயது ரோகினி தேவ கிருபையால் உயிர்ச்சேதமின்றி மீட்கப்பட்டுள்ளார். இச்சம்பத்தை முன்னிட்டு அக்கிராமத்தில் ஒரு ஜெபக்கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. பல்வேறு உடல்நலக் கோளாறுகளிலிருந்து ரஞ்சனா, லதா, நேகா, பீமா ஆகியோர் சுகம் பெற்றுள்ளனர். மீனா தீய ஆவியின் பிடியிலிருந்து சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இருசக்கர வாகன விபத்தினால் கால்களில் பெரிதளவில் காயமடைந்துள்ள நமது விசுவாசி ராஜேந்திரா விரைவில் பூரண குணமடையவும், அவரது வீட்டில் வைத்து செயல்படுகின்ற நமது சபை ஆராதனையில் தேவன் அவரை ஒரு வலுவான சாட்சியாக எடுத்துப் பயன்படுத்தவும்; மூளைப்பாதிப்பிற் குள்ளாகி இருக்கும் சுனிதா மற்றும் வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் வாமன் அற்புத சுகமடைய; சிந்தாமணின் குடும்பத்தில் தேவ சமாதானமும், ஆவிக்குரிய ஒருமனப்பாடும் காணப்பட; கண்பார்வை கோளாறினால் அவதியுறும் புஷ்பா சீக்கிரத்தில் பூரண சுகம் பெற; தனது கிணறுகள் தண்ணீரற்று வறண்டுப்போய் காணப்படுவதால் சோர்ந்து போயிருக்கும் சரத் இச்சூழ்நிலையை விசுவாசத்துடன் மேற்கொள்ள ஜெபிப்போம்.

## 29 ஜுலை சனி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சுசிலா மராக்

### மந்தனா:

**கொடிசெலா பிரவீன் & மௌனிகா**

**துதிக்க:** புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் எடுத்துரைக்கப்பட்டு, 600 பேர் இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். அதில் 15 பேர் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். 180 புதிய ஏற்பாடுகளும், 3 வேதாகமங்களும் பகிரப்பட்டுள்ளன. பாம்புக்கடிபட்ட ஷீமாவின் மாடு தேவ கிருபையால் சுகமடைந்துள்ளது. மங்லி தீய ஆவிகளின் தொந்தரவுகளிலிருந்து ஜெபத்தினால் விடுபட்டுள்ளார். கானூர் கிராம இந்திராபாய் சரீர வலிகளிலிருந்து சுகம் பெற்றுள்ளார். ராஜுவின் மனைவிக்கு நேரிட்டுள்ள சுகப்பிரசவத்திற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சோபா & தன்ராஜிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க; இரத்தச் சம்பந்தமான நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 4 வயது சிறுவன் ருத்திக்கிற்காக; சாந்த்சல்லி திருச்சபை மக்களுக்குக் கட்டப்பட்டுவரும் ஆலயக்கட்டுமானப்பணிக்காக ஜெபிப்போம்.

### தலாசரி:

**மயில்சாமி ஜோசப் & ஏசுமணி**

**துதிக்க:** வக்பாடா மற்றும் கயர் கிராமங்களில் முதல்முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அங்குள்ள மக்களிடையே புதிய ஏற்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. 4 கிராமங்களில் நடத்தப்பட்ட குடும்பக் கூடுகைகளில் சுமார் 64 பேர் பங்கேற்று தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். மத்கௌன் கிராமத்தில் வைத்து நடைபெற்ற வாலிபர் கூடுகையில் 45 வாலிபர்கள் கலந்துகொண்டு, தேவ வார்த்தையினால் பலப்படுத்தப்பட்டுள்ளனர். நமது ஆராதனைக்குப் புதிதாக வருகை தருகின்ற லதா, பூனம், ஆகாஷ் ஆகியோரின் குடும்பங்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட சிறுபிள்ளைகள் விசுவாசத்தில் வளரவும், சிறுவயதிலேயே தங்களைக் கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்து வாழவும்; அனதா தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்படவும், அவருடைய குடும்பத்தார் அனைவரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும்; சில்லார் திருச்சபையினருக்காக சிறிய ஆலயமொன்று கட்டப்பட ஜெபிப்போம்.

## தடைமாறியது, தெய்வீகம் ததும்பியது!

*உத்தரப் பிரதேசம், கைம்கன்ஜ் பணித்தளத்தைச் சேர்ந்த நமது விசுவாசி குட்டியின் கணவர் சாந்தன் குட்டியின் விசுவாச வாழ்விற்குத் தடையாக இருந்தார். சாந்தன் மாந்திரீகத்தில் நம்பிக்கை வைத்து குட்டியையும் ஒரு பாபாவிடம் அழைத்துச் சென்றார். வீடு திரும்பும்வழியில் விபத்திற்குள்ளாகி சாந்தனின் கால்களில் முறிவு ஏற்பட்டது. அவர்களுடைய மகளும் தீய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டாள். அப்போது அக்கிராமத்தில் நமது மிஷனரிகள் விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியம் நடத்தி வந்தனர். எனவே, நமது மிஷனரிகளும் பிற விசுவாசிகளும் அவர்கள் வீட்டிற்கு ஜெபிக்க அழைக்கப்பட்டனர். அதன்படியே நமது மக்களும் அங்கே சென்று ஜெபக்கூட்டத்தை நடத்தினர். அதில் அவர்கள் குடும்பமாக அமர்ந்து தேவனைத் தொழுதபோது, மனம் மாற்றம் பெற்று இயேசுவை ஏற்றுக் கொண்டனர். அல்லேலூயா!*

**30 ஜூலை ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சாருபேன் கிறிஸ்டியன்
திருமதி. பாரதி மூர்த்தி

# கர்நாடகா

## ஹலியால்:

### தாங்லால் ஸௌ & நெம்ஸாவா

**துதிக்க:** முதல்முறையாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அதன்மூலம் 85 பேர் ஆவிக்குரிய பயனடைந்துள்ளனர். 3 வேதாகமங்களும், 2 புதிய ஏற்பாடுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. நந்தகாடில் வைத்து நடைபெற்ற சிறுவர் வேதாகமப்பள்ளி நிகழ்ச்சியில் 42 சிறார்கள் கலந்துகொண்டு இயேசுவைக் குறித்து அறிந்துள்ளனர். ஊக்கமான ஜெபத்தினால் கமலம்மாவின் இருதயக்கோளாறு சுகமாகியுள்ளது. ஹோசா ஹரிஹள்ளி பகுதி புதிய தொடர்பாளர் மஞ்சப்பாவிற்கு சிறுநீர் பாதை நோய்த்தொற்றிலிருந்து கிடைத்துள்ள முழு சுகத்திற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எவ்விடத்திற்கு வேலைக்குச் சென்றாலும் மஞ்சப்பா மற்றும் சத்குருவின் குடும்பங்கள் கிறிஸ்துவுக்காக உண்மையாய் ஜீவிக்க; சஞ்சு, ஐலப்பா, நாகேஷ் மற்றும் சிதப்பா குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; ஹன்னப்பா மற்றும் லக்ஷ்மியின் குடும்பங்கள் அரசாங்கத் திட்டத்தின்படி வீடு கட்டுவதற்குத் தேவையான நிதியுதவியைப் பெற; அல்னாவர் கிராம சய்த்ரா, ஜவாலி கிராம நவீனா, பெஞ்சி கிராம நவீனா ஆகியோருக்கு புத்திர பாக்கியங்கள் கிடைக்க; உடல்நடுக்கப் பிரச்சினையிலிருந்து யஷோதாவிற்கு அற்புத சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

### கானாப்பூர்: வினயராஜ் & சாந்தா

**துதிக்க:** ஞாயிறு ஆராதனை மற்றும் வீட்டு ஜெபக்கூட்டங்கள் யாவும் இங்கு முறையே நடத்தப்பட்டு வருகின்றன. ஞாயிறு ஆராதனைகளில் புதிய மக்கள் வருகை தருகின்றனர். அப்புதியவர்களிடையே 3 வேதாகமங்களும், 5 புதிய ஏற்பாடுகளும் பகிரப்பட்டுள்ளன. சில கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணிகள் சிறப்பாக ஜெபத்துடன் செய்யப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஞாயிறு ஆராதனைக்குப் புதிதாக வருவோர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்கவும், அவர்கள் பழைய பாவ வாழ்விலிருந்து விடுதலை பெற்று கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தைப் பயமின்றி அறிக்கையிடவும்; ஆறியும் ஆறாமலுமிருக்கின்ற கடுமையான காயங்களின் ரோதனைகளிலிருந்து சீக்கிரம் பசப்பா பட்டில் சுகம் பெற; சுதாவின் மகனைப் பள்ளியில் சேர்ப்பதற்கான பணத்தேவைகள் அவர்களுக்குச் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

## *24 மணி நேரமும்!*

*ஜார்க்கண்ட், பத்னா பணித்தளம். சாமுவேல் பௌரியாவின் மகள் ஜலினா பௌரியா, கடந்த 6 மாதங்களாக எந்த வேலையும் செய்யாமல் தினமும் 24 மணி நேரமும் உறங்கிக்கொண்டு பிசாசு பிடித்தவரைப் போல இருந்தார். குடும்பத்தார் அவரை இப்பாதிப்பிலிருந்து மீட்க முயற்சித்தும் முடியவில்லை. இறுதியில் அவர் நமது FMPB மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டார். நமது விசுவாசிகளும் மருத்துவரும் ஜெபித்து அவருக்கு மருந்துகளைக் கொடுத்தனர். தேவ கிருபையால் அவர் தற்போது சற்று சுகமாகி, விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியத்தில் உதவியதோடு, சிறு பிள்ளைகளுடன் நடனமாடி, தேவனை மகிமைப்படுத்தினார். தேவனுக்கே மகிமை!*

## 31 ஜூலை திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேனியல் டேவிட் R.

# ஆந்திரப் பிரதேசம்

### பெனுகொண்டா: தேசாய் திலீப் பாய் & ராந்தே லக்ஷ்மிபேன்

**துதிக்க:** சின்னப்பரெட்டிபள்ளி, சேர்லோ பள்ளி, ஹனுமாபள்ளி ஆகிய கிராமங்களில் வைத்து நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியம் மூலம் 687 பேர் சுவிசேஷ வசனத்தைக் கேட்டிருக்கின்றனர். சந்திரகிரி மற்றும் குருவண்டலபள்ளி கிராமங்களில் இயேசுத்திரைப்படம் மூலம் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமபுரம் திருச்சபையில் வைத்து தேடுவோர் முகாம் நடத்தப்பட்டதில், 2 பேர் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் வெளிப்படையாக அறிக்கை செய்துள்ளனர். 5 கிராமங்களில் வாரந்தோறும் ஜெபக்கூடுகைகள் நடத்தப் பட்டு வருகின்றன. விஷப்பாம்புக்கடியின் அபாயத்திலிருந்து அற்புதமாக மரியம்மா காப்பாற்றப்பட்டுள்ளார். ரோஜாக்காவிற்கு சுகப்பிரசவம் மூலம் அழகிய பெண் குழந்தையொன்று பிறந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாச ஜெபத்தின் மூலம் மரியம்மா மற்றும் கருணாம்மா அவர்களது சரீரப் பெலவீனங்களிலிருந்து சுகமடைய; அருணாவும், சீமாவும் ஒருவருக்கொருவர் ஒப்புரவாக; நந்தினி, மரியம்மா, ரேகலாம்மா மற்றும் பியூலாவிற்கு மழலை பாக்கியங்கள் கிடைக்க; விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற குழந்தைகள் தாங்கள் எடுத்த நல்லாவிக்குரிய தீர்மானங் களில் நிலைத்து நிற்கவும், அவர்களது பெற்றோர்களும் இரட்சிப்பிற்குள் வரவும்; சகரியா, எலிசபெத், ஆபிரகாம் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து மீள; தீய ஆவியின் பிடியிலிருந்து நேத்ரவதி விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

# தமிழ்நாடு

### இளம்பிள்ளை: செல்வகுமார் R. வில்சன் & ஜெயா ஹெலன் ரோஸ்

**துதிக்க:** வல்லியம்மாளின் பாதத்தில் பாம்பு சுற்றியிருந்தபோதும், அதினால் எத்தீங்கும் நேரிடாதபடி அவர் காப்பாற்றப் பட்டுள்ளார். வயிற்றுக்கட்டியை அகற்ற செய்யப்பட்ட அறுவை சிகிச்சையின் பெலவீனங்களிலிருந்து லக்கியின் தாயார் நன்கு சுகமடைந்து வருகின்றார். விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட சிறுபிள்ளைகள் தங்கள் வாழ்வை மிக அழகாக கிறிஸ்துவிடம் அர்ப்பணித்துள்ளனர். விசுவாசப்பின்னடைவின் நிமித்தம் ஆலயம் வராமலிருந்த பெருமாயி மீண்டும் தேவ கிருபையால் ஆராதனைக்கு வரத் தொடங்கியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மாந்திரீக கட்டுக்குள் இருக்கும் ராமசாமி குடும்பத்தினர் விடுவிக்கப்படவும், அவர்களது நிலங்கள் உறவினர்களின் அபகரிப்புக்கு நீங்கலாகி பாதுகாக்கப்படவும்; சுவிசேஷத்தைக் கேட்டிருப்போர் மனந் திரும்பி, இயேசுவை ஏற்றுக்கொள்ள; குமார், அழகம்மா, நிலா ஆகியோர் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிடுவதற்கான தைரியத்தை கர்த்தருடைய கரத்திலிருந்து பெற; விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பிள்ளைகளின் பெற்றோர் களும் இரட்சிப்பின் விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ள; கடன் பிரச்சினை களிலிருந்து நமது விசுவாசிகள் மீள; தேவ இரட்சிப்பை அநுபவிக்க மக்களின் மனக்கண்கள் திறக்கப்பட; வெனிலாவின் குடும்பத்தில் ஒப்புரவு ஏற்பட்டு அனைவரும் ஒன்றுபட ஜெபிப்போம்.

386 மிஷனரி ஆல்பம்



# திரு. மனாசே டேனியல் & திருமதி. செல்வ மெரினா குடும்பம்

திரு. மனாசே டேனியல், சென்னையைச் சார்ந்த கிறிஸ்தவ தம்பதியரான திரு. J. ஜெய சௌந்தரராஜன் & திருமதி. ஜாய் (லேட்) ஆகியோருக்குப் பிறந்த இரட்டை ஆண் குழந்தைகளில் ஒருவராக 26.11.1983-ல் பிறந்தார். இவர் பெசன்ட் நகரில் பள்ளி, வீடு மற்றும் ஆலயம் என நல்ல கிறிஸ்தவ சூழலில் வளர்க்கப்பட்டார். ஆயினும், இவர் தன் வாழ்வில் கிறிஸ்துவோடு நெருங்கிய தொடர்பில் இல்லை. பின்பு 2001-ல் நடந்த 3 நாட்கள் வாலிபர் முகாமொன்றில் இவர் பங்கேற்றார். தேவ கிருபையால் அம்முகாமில் இவர் இரட்சிக்கப்பட்டு, ஊழியத்திற்கான அழைப்பைப் பெற்றார். இவரது ஊழிய அர்ப்பணிப்பைக் குறித்து கேள்விப்பட்ட பெற்றோர் அகமகிழ்ந்து இவரிடம், கல்லூரி பட்டப்படிப்பை முடித்துவிட்டு ஊழியத்தில் இணையுமாறு ஆலோசனை கொடுத்தனர். அதன்படி இவர் 2006-ல் பொருளாதார பிரிவில் பி.ஏ., பட்டப்படிப்பை முடித்து, சிட்டி வங்கியிலும் பின்பு ICICI வங்கியிலும் சிறப்பான வேலை வாய்ப்புகளைப் பெற்றார். பின் ஒரு காலக்கட்டத்தில் ஜீவனுள்ள தேவனை விட்டு தான் எங்கோ தவறான திசையில் செல்வதாக உணர்ந்தார். பின்பு மீனம்பாக்கத்தில் வைத்து நடந்த FMPB வாலிபர் கூட்டத்தில் வைத்து தேவ தயவால் 2-வது முறையாக ஊழிய அழைப்பைப் பெற்று, தேவனுக்குப் பணிசெய்ய தன்னை மறுபடியும் அர்ப்பணித்து, 2007-ல் FMPB-ல் இணைந்தார். பின்பு உ.பி. ஜான்சியிலுள்ள நமது தேசிய மிஷனரிப்பயிற்சி மையத்தில் ஒருவருட மிஷனரிப்பயிற்சியை முடித்து, நாக்பூர் பணித்தள அலுவலகத்திலும், அதன்பின் ஜம்மு & காஷ்மீரிலுள்ள நௌஷேராவிலும், கலகோட் என்ற துணை மையத்திலும், இதற்கிடையில் 6 மாதக்காலம் பணித்தளப் பயிற்சியாக பஞ்சாபிலும், பின்பு ஜம்மு & காஷ்மீரிலுள்ள பசோலி பணித்தளத்திலும் பணியமர்த்தப்பட்டார்.

பின்பு தேவ தூய நியமப்படி இவர் 24.08.2011-ல் சகோதரி. செல்வ மெரினாவை திருமணம் செய்தார். இச்சகோதரி தென்காசி மாவட்டத்திலுள்ள மயிலப்பபுரத்தைச் சார்ந்த கிறிஸ்தவ தம்பதியரான திரு. இம்மானுவேல் & திருமதி. ஆதிமை ராணி ஆகியோருக்கு மகளாக 29.04.1988-ல் பிறந்தார். இவர் 9-ம் வகுப்புப் படித்துக்கொண்டிருக்கும்போது, வலிப்பு நோயினால் அவதிபட்டார். எனவே, இவரது தாய் இவரைத் தூக்கிக்கொண்டு ஜெபக்கூடுகைகளுக்கும், மருத்துவமனைகளுக்கும் செல்வார். இவ்வாறு ஒருமுறை பாளையங்கோட்டையில் வைத்து நடைபெற்ற ஒரு ஜெபக்கூடுகையில் பங்கேற்றபோது, இவரது தாய் இவரிடம், “ஆண்டவரே, நீர் என்னைச் சுகமாக்கினால், நான் உமது ஊழியத்தை முழுநேரமாகச் செய்வேன்!” என பொருத்தனை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். ஆனால் அந்நாளில் அநேகமுறை வலிப்பு வந்ததினால், இவர் அந்த நாள் ஜெபநேரம் முழுவதும் சுயநினைவற்றவராகவே இருந்தார். முடிவில் தேவ ஊழியர் இவருக்காக ஊக்கமாய் ஜெபித்தபோது, இவருடைய தாயின் கண்ணீரின் ஜெபத்தை முன்னிட்டு, தேவன் இவரை முழுமை யாகச் சுகப்படுத்தினார். இது இவரது வாழ்வை முழுவதுமாக மாற்றியது. அதன்பின் கிரமமான வேதவாசிப்பும் ஜெபமும் இவரது வாழ்வின் முக்கிய பங்காயிற்று. அறைகூவல் பத்திரிக்கையில் வெளியாகும் மிஷனரி வாழ்க்கை வரலாறுகளை இவர் தொடர்ச்சியாக வாசிக்க ஆரம்பித்தார். அது இவருடைய வாழ்வில் பெருந்தாக்கத்தை உண்டுபண்ணியது. பின்பு இவர் 2007-ல் நடந்த தமிழ்நாடு மாநிலமுகாமில் கலந்துகொண்டு, தன் வாழ்வை ஊழியத்திற்கென அர்ப்பணித்தார். பின் பொருளாதார பிரிவில் தனது பி.ஏ., பட்டப்படிப்பை முடித்து விட்டு, 2009-ல் நமது இயக்கத்தில் ஊழியராக இணைந்தார். பின்பு ஜான்சியில் தனது ஒருவருட மிஷனரிப்பயிற்சியை நிறைவு செய்து, குஜராத்திலுள்ள ஜாவ்டா - தூய தாமஸ் பள்ளியில் பணியமர்த்தப்பட்டார். திருமணத்திற்குப்பின் இவர்கள் குடும்பமாக 2 வருடங்கள் ஜம்முவிலுள்ள உதம்பூர் பணித்தளத்திலும், பின்னர் 2013-லிருந்து மேற்கு வங்காளத்திலுள்ள சுந்தர்பான்ஸ் தீவிலும், 2016-லிருந்து ஜார்க்கண்டிலுள்ள அமரபாடா பணித்தள சந்தால் இனமக்கள் மத்தியிலும் பணி செய்தனர். தற்போது இவர்கள் மும்பை விரிவுப்பணி பிரிவில் பணியாற்றி வருகின்றனர். தேவன் இவர்களுக்கு இரு மகள்களைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்த மகள் ஜெமிமா ஹெஸ்பர் (D.O.B. 09.05.2012) 6-ம் வகுப்பிலும், இளைய மகள் ஜெனல்லி கேசியா (D.O.B. 10.02.2015) 3-ம் வகுப்பிலுமாக முலாந்த் - மும்பையிலுள்ள புனித. மேரி பள்ளியில் படித்து வருகின்றனர். இம்மிஷனரிக் குடும்பத்தை நமது அநுதின ஜெபத்தில் நினைவுகூருவோம்.

Regd. Newspaper for India No.17759/69

# Tender Notifications - Calendar 2024

**FRIENDS MISSIONARY PRAYER BAND** invites sealed tender for printing of two lakhs calendars approximately (Subject to revision) in various languages for the year 2024.

## Calendar Specifications

| | | |
|---|---|---|
| A. | Size of calendar | 22” X 17” |
| B. | Paper Quality | 130 gsm real foreign art paper |
| C. | Colour | Four Colours with white background |
| D. | No of pages | 6 sheets Front and back |
| E. | Tin Mounting | 5 mm |

## Conditions:

1. The printer should have minimum 10 years’ experience in calendar colour printing of not less than 2 lakhs per year and possesing CPC MACHINE.
2. Time Frame: Printer should ensure the completion of work within 30 days from the date of awarding of the work order.
3. Packing should be made in 10 numbers of calendar in each bundle.
4. Earnest Money Deposit: Rs.1,00,000/-

## Tender Programme

Supply of Tender document upto 16.08.2023 upto 5pm
Date of submission upto 31.08.2023, upto 5pm
Date of opening on 04.09.2023, 11am

Tender documents (free of cost) can be obtained in person or by post from the Secretary Communication, FMPB, 29, High School Road, Ambattur, Chennai - 53. After submitting documents proof for having 10 years of experience in calendar (colour) printing.

# Quotations for Diary and Planner

We invite quotations for supplying 3000 diaries and 15,000 pocket size monthly planners (Revision in the number of copies, if any) for the year 2024.

| | |
|---|---|
| Size of the planner | 6 x 3.5 inches (Rexine type) |
| Pages of the planner | 232 pages |
| Size of the diary | 8.5 x 5.5 inches |
| Pages of the diary | 440 pages |

Please send your samples along with quotations in sealed envelope on or before 31.08.2023 to the Calendar Committee, FMPB, 29, High School Road, Ambattur, Chennai - 600053. Phone: 044-26570404

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***